
# செவ்வாழை

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி




சிறப்பிதழ் 1997

KP7

# செவ்வாழை

## சிறப்புமலர் – 2

15 - 11 - 1997

மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி

# பாடசாலைக் கீதம்

வாழ்த்தி வணங்கிடுவோம் - கல்வி
வளர்ந்திடப் போற்றிடுவோம்

வளம் பல சூழ்ந்த நல் வாழைச்சேனையில்
உளம் மகிழ் கலைகளை உணர்ந்தே பயின்றிட
இடம் தரும் கூடமாம் இந்துக்கல்லூரியை
( வாழ்த்தி... )

சித்திகள் பல தரும் சித்தி விநாயகர்
பக்கத்திலிருக்கையில் பயமேது நமக்கு
நித்தமும் அவர் புகழ் நினைந்து நாம் பாடிட
( வாழ்த்தி... )

இன மத பேதங்கள் இல்லாது கல்வியை
மனங் கொண்டு பயிலவும், மகிழ்வுடன் வாழவும்
களம் தரும் கல்விக் கூடத்தை நாமென்றும்
( வாழ்த்தி... )

தாய் தந்தை குரு தெய்வம் தாள் பணிந்தே வணங்கி
தாய் மொழி தமிழுடன், ஆங்கிலமும் பயின்று
ஓயாது பணியாற்றி, உயர்ந்திட நாமென்றும்

வாழ்த்தி வணங்கிடுவோம் — கல்வி
வளர்ந்திடப் போற்றிடுவோம்.

# செவ்வாழைப்பூ மலர்கிறது

செல்வி. சி. லோகேஸ்வரி
( பத்திரிகை ஆசிரியை )

மட் / வாழைச்சேனை இந்துக்கல்லூரி தன் வளர்ச்சியின் பெருமிதத்துடன் வழங்கும் சிறப்புமலர் செவ்வாழையாகும்.

1980 - 08 - 31 ல் கையெழுத்துப் பத்திரிகையாகவும் 14-10-1992ல் அச்சிடப்பட்டும் வெளியிடப்பட்ட செவ்வாழை மீண்டும் மலர இறைவனின் ஆசி கிடைத்துள்ளது.

துன்பமும், நெருக்கடியும் மிகுந்த இந்தச் சிரமமான கால கட்டத்தில் கல்வி ஆர்வமும், கலை ஆர்வமுமே இம்மலர்வுக்கு காரணமாகும். பாடசாலை ஆசிரிய மாணவர்களின் உள்ளங் களில் உருவாகிய கருத்துக்களையும், தொகுப்புக்களையும் கொண்டு மலர்வதால் இளம் உள்ளங்களில் எழுத்தாற்றலை யும் அறிவு வளர்ச்சியையும் உருவாக்குமென்பது திண்ணம்.

இம்மலரின் மலர்வுக்கு ஆக்கங்கள் தந்தவர்களுக்கும் பண உதவி செய்தவர்களுக்கும் குறிப்பாக அதிபர், உபஅதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், மற்றும் பாடசாலை சங்கங்களின் உறுப் பினர்கள் ஆகியோருக்கும், ஆசியுரை வழங்கிய மேலதிக மாகா ணக் கல்விப்பணிப்பாளர் திரு. S. S. மனோகரன் அவர்கட்கும், வாழைச்சேனை பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. நாகேந்திரம் அவர்கட்கும், பாடசாலை அதிபர் திரு. மு. தவராஜா அவர்கட்கும், தட்டெழுத்தாளர் திருமதி. அ. சுதாகரன் அவர்கட்கும் மற்றும் எல்லா வகையிலும் இம் மலரின் மலர்வுக்கு உதவிய அனைவருக்கும் பத்திரிகைக் குழுவின் சார்பில் நன்றி தெரிவிப்பதில் அகமகிழ்கிறேன்.

இம்மலரில் ஏதும் குறையிருப்பின் மன்னித்து மேலும் தொடர்ந்து மலர் வெளியிட உங்கள் அன்பையும் ஆசியையும் வேண்டி நிற்கிறேன்.

''நன்றி''

# பொருளடக்கம்

1. இக்கல்லூரி பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள்
2. செய்தி கேட்டு
3. செவ்வாழை வெளியீட்டுக் குழு
4. இலங்கையின் சூழல் மாசடைதலும் அதன் விளைவுகளும்
5. இந்த ஊர் எங்கள் வாழையூர்
6. இனியேனும் ஏதேனும் செய்தாக வேண்டும்
7. இனியும் மனிதப் பிறவி தேவையா ?
8. சூப் பேஸ்ரீ (சிற்றுண்டி)
9. நாயின் சுயசரிதை
10. அன்புக் கனிக்காக
11. டாக்டர் டி. பி. ஜாயா
12. படைக்க மறந்ததேனோ
13. ஒலிம்பிக் என்று பெயர் எப்படி வந்தது?
14. யுத்தக் கொடுமைகள் (சிறுகதை)
15. எனது நாடு
16. கதிரவனே வாழ்க
17. காந்தியின் கல்விக் கொள்கை - ஓர் ஆய்வு
18. ஒழுக்கம் உயர்வு தரும்
19. அடக்கம்
20. ஓசோன் படையும் பாதிப்பும்
21 மாண்புறும் மாணவர் நாமே
22. பெற்றோர்
23. சிறுவர் உரிமைகள்
24. நோயற்ற வாழ்வும் விவசாயமும்
25. ஒரு தெரேசாவாக ஒரு டயானாவாக
26. மாணவர் இலக்கணம்
27. உனக்கும் ஒரு வாழ்வு உண்டு
28. முத்தமிழ் வளர்ப்போம்
29. முன்னேறிச் செல்
30. போதைப் பொருட்களும் அவற்றின் விளைவுகளும்
31. தனித்தன்மையை வளர்த்துக்கொண்டால் வெற்றி நிச்சயம்
32. பெண்ணென்று பூமியிலே பிறந்து விட்டால்
33. மாணவ சமூகமே ஆசார்களைப் புரிந்திட வேண்டும்
34. ஒரு பசுக்கன்றும் பன்றியும்
35. குடித்தொகை பெருக்கமும் அதன் விளைவுகளும்
36. குறுக்கெழுத்துப் போட்டி
37. இந்துமத இறைவனாகிய விநாயகரின் வேறு பெயர்களும் அவற்றின் பொருள்களும்
38. முதன்மையான பெறுபேறுகள்

மட்டக்களப்பு மாவட்ட

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின்

# ஆசிச் செய்தி

எஸ். எஸ். மனோகரன்
(மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மட்டக்களப்பு.)

சஞ்சிகை வெளியீடு என்பது சஞ்சிகையை வெளியிடு வோருக்குப் பெருஞ் சவாலாக அமைகின்றது என்பது உண்மை தான். ஆரம்பத்தில் வேகம் கொள்ளும் சஞ்சிகை வெளியீடு காலப்போக்கில் மந்தமாகி இல்லாமற் போய் விடுவதும் உண்டு. எனவே சஞ்சிகையை வெளியிடுபவர்கள் இதைக் கவனத்திற் கொண்டு தொடர்ந்தோர்ச்சியான வெளியீட்டுக்குத் தடையாக வுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு அவற்றை நீக்க வழிசெய்தல் வேண்டும். சஞ்சிகை வெளியீடு இணைப்பாட விதானச் செயற்பாடுகளுள் ஒன்றாக இருப்பதனால் இது பாடசாலை களில் முக்கியமானதொன்றாக இருக்கிறது. இதை உணர்ந்து செயற்படும் பாடசாலைகளுள் ஒன்றான மட் / வாழைச்சேனை இந்துக்கல்லூரியும் 'செவ்வாழை' என்னும் பெயரில் சஞ்சிகையை வெளியிடுகிறது. இதற்காக என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஐந்து வருடமாகப் பல்வேறு சூழ்நிலை நிமித்தம் வெளியிடப்படாமல் இருந்த 'செவ்வாழை' இனிச் செழித் தோங்கப் போகிறது என்று அதிபர் தெருவித்த கருத்தை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகையை வெளியிடக் காரணகருத்தாக் களாக இருந்த அனைவரையும் மீண்டும் பாராட்டி இது தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று என் ஆசியைத் தெரி விக்கிறேன்.

மாவட்டக் கல்வித்திணைக்களம்,
மட்டக்களப்பு.
10 - 11 - 1997

# பிரதிக் கல்விப்பணிப்பாளர் வாழைச்சேனை

# திரு. சி. நாகேந்திரம் அவர்களின்

# ஆசியுரை

கல்வியை மேம்படுத்த பாடசாலைகளில் பாடவிதானச் செயற்பாடுகளும் பாடத்தோடிணைந்த கருமங்களும் நடைபெறுகின்றன. பாடசாலைப் புறக்கிருத்திய வேலைகள் மாணவர் சுதந்திரமாகச் செயற்பட்டு அறிவுத்திறன் ஆற்றலை வளர்க்கிறது. அவ்வாறான செயற்பாடுகளில் சஞ்சிகை வெளியீடுகள் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பாடசாலைச் சஞ்சிகை வெளியீடுகள் மாணவரிடம் மறைந்து கிடக்கும் திறமைகள் இனங்காணப்பட்டு வெளியிடுவதற்கு வழியமைக்கிறது. எதிர் காலத்தில் சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய தலைவர்கள் வழிகாட்டிகள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் போன்றோரை உருவாக்கும் ஊடகமாகவும் சஞ்சிகைவெளியீகள் காணப்படுகின்றது.

இருபதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு இன்று பல்துறையிலும் வீறு நடைபோடும் மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் திறன் செயற்பாட்டு நிகழ்வுகளில் ''செவ்வாழை'' வெளியீடு சிறப்பான பங்காற்றுகின்றது கற்றலில் மேன்மையான அடைவுகளை வெளிக்காட்டும் அதேவேளை விளையாட்டு தமிழ்த்திறன், ஆங்கிலத்திறன் போட்டிகளிலும் உயர் பெறுபேறுகளைப் பெறும் இக்கல்லூரியின் சஞ்சிகை வெளியீடு கலாசாலை மாணவர்களின் எதிர்கால சுபீட்சத்தைக் காட்டி நிற்கின்றது. நவீன யுகத்தைத் தேவையான நல்ல சிந்தனையாளர்களை உருவாக்கும் மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி மேலும் பல வெற்றிப்படிகளைத்தாண்டி சிறப்புப் பணியாற்ற ஆசிகள். ''செவ்வாழை'' ஓங்கி வளர்ந்து உயர் களியீண்டு உலகில் அழியா இடம் பெற எனது ஆசிகள்.

நன்றி!

### மட்/ வாழைச்சேனை இந்துக்கல்லூரி அதிபர்

# திரு. மு. தவராஜா அவர்களின்

# ஆசியுரை

எதிர்கால இளைஞர்களின் திறன்களை வெளியிடும் தரமான களமொன்றைக் கட்டியங்கூறும் மலராகச் செவ்வாழை வெளிவருவதில் சந்தோசப்பட்டு ஆசி கூறுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாற்றங்கள் மட்டுமே இவ்வுலகில் நிலையானது பலதரப்பட்ட மாற்றங்களுக்கு மத்தியிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் திறம்படப் பணியாற்றி செவ்வாழையினை மீண்டுமொருமுறை தேன் சொரிய வைக்கின்றனர்.

தட்டச்சு, தரம்பிரிப்பு, அச்சேற்றல் எனும் பல கட்டங்களிலும் அலுப்பின்றி அரும்பணியாற்றி இம்முயற்சி வெற்றி பெறப்பாடுபட்ட சகலருக்கும் இறை ஆசி கிடைக்கவேண்டும்.

சிக்கலான வேளைகளில் சினங்கொள்ளா ஆசிரியர்களும் நேரமற்ற வேளையிலும் ஓடிவரும் சங்கங்களும் பாடுபடக்காத்திருக்கும் பழைய மாணவரும் வீடுவீடாய்ச் சென்று தேடிவந்த செல்வமதில் செவ்வாழை மலரொன்று உங்கள் கையில் தவழ்கிறது.

இன்று கற்பனை வளமற்ற கருத்தாளமெதுவுமற்ற தலைகீழான வொரு மொழியாகத் தமிழ்மொழி மாறிவருவதை நாம்காண்கிறோம். பாடல்களில் வாத்தியங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அனேகமான தமிழ் சினிமாப்பாடல்களில் பலதரப்பட்ட இரைச்சலான ஒலிகளுக்கிடையே சில வரண்ட குரல்கள் வந்து போனதன் விளைவு, நாம் ஏற்கனவே கேட்ட குரல்களையும் வரட்சியுள்ளதாக ஆக்கிவிட்டன. அனேகமான தமிழ்ச் சஞ்சிகைகள் வியாபாரமயமாகிவிட்டதனால் தமிழ் மொழி அசிங்கமான முறையில் இலங்கையிலும் கொச்சைப்படுத்தப்படுவதனை நாம் காண்கிறோம்.

இந்நிலையில் பாலைவனத்திலும் ஒரு பசுஞ்சோலையாய் வெளிவரும் செவ்வாழையின் தோற்றத்திற்கு அரும்பணியாற்றும் ஆசிரியருக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி சொல்வதோடு எதிர்காலத்திலும் வருடமொரு செவ்வாழை வெளிவந்து தமிழ் மொழியை இவ்வையகத்தில் வளமாக வாழவைக்கும் பணியில் வளர்ந்து செல்ல இறைவனை வேண்டி இச்செவ்வாழைக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

# கல்லூரி நிர்வாகக் குழு

## அதிபர்

1. திரு. முருகேசு தவராஜா B. Sc (B. ad) Dip. in. Ed

## உபஅதிபர்கள்

2. திரு. சதாசிவம் சிவநேசராஜா B. Sc. Dip. in. Ed
3. அருட்சகோதரி மேரிசிறியபுஷ்பம் Eng. Trd

## பகுதித்தலைவர்கள்

4. செல்வி. லோகேஸ்வரி சீனித்தம்பி B. A. Dip. in. Ed
5. திருமதி. ராஜலோகினி செல்வராஜா Eng. Trd
6. திரு. தர்மலிங்கம் தர்மபாலன் B. Sc. Dip. in Ed
7. திரு அன்ரனி ஜெயஜீவன் T. Trd

## ஆசிரியர்கள்

8. திருமதி. புஷ்பராணி அழகரட்ணம் B. Sc. Dip. in Ed
9. திருமதி. பானுமதி வசந்தகுமார் Ho. Sc. Trd
10. திருமதி. திருபராணி மாரிமுத்து Maths. Trd
11. திரு. சந்திரசேகரம் மகேஸ்வரன் T. Trd
12. திரு. நாகலிங்கம் மகாலிங்கம் Sc. Trd
13. திருமதி. கமலசாந்தினி கணேசன் Agri; Trd
14. திருமதி. அனுஷியா சிவனேசராஜா Dcnle. Trd
15. திரு. நவரெட்ணம் வெஸ்லிஅருள்சீலன் Art. Tr
16. திரு. நல்லதம்பி பத்மநாதன் Maths. Trd
17. திரு. பாலிப்போடி கணேசமூர்த்தி Eng Trd
18. திருமதி. இன்பமலர் மகாலிங்கம் (T. Trd) B. A
19. செல்வி. தவமலர் கந்தையா Trainee. Tr
20. செல்வி. பரமேஸ்வரி தம்பிராஜா Trainee. Tr
21. திரு. தம்பிராசா அகிலன் B. A. Dip. in, Ed
22. அருட்சகோதரி. மேரிரஞ்சனா Trainee. Tr
23. திரு. தேவஇரக்கம் இளங்கோ Tech Tr
24. திரு. சின்னத்தம்பி முருகவேள் Commerce. Tr
25. செல்வி. முருகேசப்பிள்ளை இந்திராதேவி B. A. Di P. in. Ed
26. திருமதி. சசிகலா விஜயரட்ணம் T. Trd
27. திருமதி. லலிதா நடேசமூர்த்தி T. Trd
28. திருமதி. பாமதி வாமதேவன் So. Studies Trd
29. திருமதி. சிவசோதிமலர் சோமநாதன் So. Stadeis Trd
30. திரு. தங்கத்துரை பிரபானந்தன் Sci. Trd
31. திருமதி. சிவலதா குணலிங்கம் B. Com
32. திருமதி. யோகராணி வர்ணகுலசிங்கம் B. A. Dip. in. Ed

33. செல்வி. அனட் சிமியோன் Sci. Trd
34. திருமதி. பிரளாவதி கோபிதாஸன் T. Trd
35. செல்வி. அன்புமொழி பரமலிங்கம் T. Trd
36. செல்வி. நிர்மலாதேவி கணபதிப்பிள்ளை B. A
37. திருமதி. சுகிர்தினி தியாகராஜா DELIC Enq. Tr
38. செல்வி. ரஜினி பெரியதம்பி Sci. Trd
39. திருமதி. சுமதி பிரபாகரன் T. Td
40. திரு. மூத்ததம்பி சிவலிங்கம் BBA
41. திரு. இரகுபதிப்பிள்ளை சிவபாலர் Eng. Tr

## தொண்டர் ஆசிரியர்கள்

1. திருமதி செ. பரமானந்தன்
2. திரு வே. நவரெட்ணராஜா (விளையாட்டுப்பயிற்சியாளர்)
3. செல்வன் செ. அல்பிறின் யேசுசகாயம்
4. செல்வன் தே. ஜெயரூபன்
5. செல்வன் இ. நிதிராஜ்
6. செல்வன் க. தயாளகுணசேகரன்
7. செல்வன் லி. திருநிறைச்செல்வன்
8. செல்வன் சி. சிவகுமரன்
9. செல்வன் கு. சுதர்சன்
10. செல்வன் க. விக்னேஸ்வரன்
11. செல்வி இ. சகாயமாலினி
12. செல்வி வே. அனுசூயா
13. செல்வி மு. நேசமலர்
14. செல்வி பூ. சுடர்மதி
15. செல்வி சா. சுமதினி

திரு. வீ சிவலிங்கம் (அலுவலக ஊழியர்)
செல்வி ச. யாமினி (எழுது வினைஞர்)
திருமதி அ. சுதாகரன் (தட்டெழுத்தாளர்)
செல்வி ந. ஜீவா (பாடசாலை பல்சிகிச்சையாளர்)
திரு நா. பாக்கியராஜா (காவலாளர்)

## அபிவிருத்திச் சங்கம்

தலைவர்:- திரு மு. தவராஜா
செயலாளர்:- திரு வி. கே. தர்மலிங்கம்
பொருளாளர்: -திரு பா. கணேசமூர்த்தி

## நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. செ. செல்லத்துரை
திரு. வே. ஜீவராஜா
திரு. தே. பத்மநாதன்
திரு. க. சந்திரா
திருமதி. ம. மனோகரன்
திரு. த. தர்மபாலன்
செல்வன் சா. ரவிக்குமார்

## எங்கள் மன்றங்கள்

பழைய மாணவர் மன்றம்
இந்து மாணவர் மன்றம்
கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம்
விளையாட்டுக் குழு
கணித விஞ்ஞான மன்றம்
ஆண் சாரணர் படை
பெண்கள் சாரணியம்
தமிழ் மன்றம்
ஆங்கில மன்றம்
திருக்குறள் மன்றம்
சூழல் அணி

# இக்கல்லூரி பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகள்

1929ல் திரு. ஆறுமுகம் என்பவர் காணியில் திரு. கந்தையா அவர்களினால் சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அறுபத்தொன்பது வருட வரலாற்றினைக் கொண்டது. இக்கல்லூரியின் வளர்ச்சிப் படிகளில் பங்கு கொண்டு ழைத்த அதிபர்கள் விபரம் வருமாறு

| அதிபர் | இடம் | காலம் |
|---|---|---|
| திரு. சிவசம்பு | காரைதீவு | 1929 - 1946 |
| திரு. மயில்வாகனம் | யாழ்ப்பாணம் | |
| திரு. செல்வநாயகம் | நற்பிட்டிமுனை | |
| திரு. இலக்கணப்பிள்ளை | வந்தாறுமூலை | |
| திரு. எஸ். பி. கந்தையா | வாழைச்சேனை | |
| திரு. முருகேசு | முள்ளியவளை | |
| திரு. சி. விநாயகமூர்த்தி | அமிர்தகழி | |
| திரு. அப்புசாமி | வந்தாறுமூலை | |
| திரு. எஸ். இளையதம்பி | சுன்னாகம் | |
| திரு. பூ. சபாபதிப்பிள்ளை | தாமரைக்கேணி | |
| திரு. ஆறுமுகவடிவேல் | மட்டக்களப்பு | |
| திரு. ஐசேக் | மிருதவில் | |
| திரு. எஸ். இளையதம்பி | ஆரையம்பதி | 1946 - 1969 |
| திரு. I. பரமானந்தம் | ஆரையம்பதி | 1969 - 1970 |
| திரு. சி. நடராஜா | சித்தாண்டி | 1970 - 1975 |
| திரு. வடிவேல் | வாழைச்சேனை | 1975 - 1975 |
| திரு. எஸ். பொன்னுத்துரை | மட்டக்களப்பு | 1975 - 1978 |
| திரு. கே. தியாகராஜா | வாழைச்சேனை | 1978 - 1979 |
| திரு. எஸ். சிவராஜா | மட்டக்களப்பு | 1979 - 1984 |
| திரு. தா. பரசுராமபிள்ளை | வந்தாறுமூலை | 1984 - 1994 |
| திரு. நா. கதிர்காமத்தம்பி | வாழைச்சேனை | 1994 - 1996 |
| திருமதி. ப. கனகசிங்கம் | வாழைச்சேனை | 1996 - 1996 |
| திரு. மு. தவராஜா | வாழைச்சேனை | 1996 |

25 பிள்ளைகளோடு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் சைவவித்தியாசாலையின் பெயர் தமிழ் மகா வித்தியாலயமாக பெயர் பெற்று இன்று இந்துக்கல்லூரியாக உள்ளது அத்தோடு கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலைகள் தரம் பெற்று பின்பு மகாவித்தியாலயமாகி 1 ஏபி பாடசாலை ஆகியது.

உயர்தர பிரிவில் வர்த்தகப் பகுதியில் மாவட்டத்தில் முத்திரை பொறித்த இப் பாடசாலை மட்டக்களப்புக் கல்வி அபிவிருத்திச் சபையின் 1995ல் சகல மட்டங்களிலும் கல்வியில் சாதனை படைத்த பாடசாலை ஆக எமது கல்லூரியினைத் தெரிவு செய்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலத்தில் கலை கலாச்சாரம் விளையாட்டு ஆகிய போட்டிகளில் கோட்டம், மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் ஆகிய நிலைகளில் போட்டியிட்டு வெற்றி பெறும் நிலைக்கு உயர்ந்துள்ளது. தமிழ் தினம், ஆங்கில தினம், விளையாட்டு நிகழ்வுகளில் எமது ஆசிரியர்கள் முன்னின்று உழைப்பதனால் எமது கல்லூரி மென்மேலும் உயர்ந்து செல்கிறது. ஆங்கில இலக்கியத்தோடு கூடிய எட்டுப் பாடங்களிலும் விசேட திறமைச் சித்தி பெற்ற பாடசாலையாக எமது கல்லூரி மாவட்டத்திலேயே முன்னணியில் நிற்பது எமது சாதனைக்குச் சாட்சியாகும்.

இதுவரை இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த அத்தனை பேருக்கும் நன்றி சொல்வதோடு மென்மேலும் தடைகளைத் தாண்டி இக்கல்லூரி முன்னேறிச் செல்ல எமது சமூகத்தின் சகல மட்டப் பண்பாளர்களும் அணிதிரண்டு ஆலோசனையும் உதவியும் வழங்க வேண்டும் என எல்லோரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

ஏற்கனவே 1992 வெளியிடப்பட்ட செவ்வாழையில் எமது கல்லூரி வரலாறு வெளியிடப்பட்டுள்ளது. இதனை மேலும் மெருகேற்ற வேண்டி இக்கல்லூரியின் வரலாற்றுக் குறிப்புக்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

M. THAVARAJAH
Principal
Bt/ Valaichchenai ... College,
Valaichchenai.

## செய்தி கேட்டு

ஆக்கம்: இ. சஷிகுமார்
ஆண்டு 13 வர்த்தகம்

அங்கே ஒரு சத்தம் - அது
செல்போடும் சத்தம்
இங்கே ஒரு சத்தம் - அது
துப்பாக்கி சீறும் சத்தம்

டும்...... டும்...... டுமில்...... டுமில்......
ஊரெல்லாம் ஒரே நிசப்தம்
இடையில் நாய்களின் ஊளைச்சத்தம்
மீண்டும் அங்கே ஒரு சத்தம் - அது
அன்புலன்ஸ் வண்டியின் சத்தம்
மீண்டும் இங்கேயும் ஒரு சத்தம் - அது
மரண வீட்டு ஒப்பாரிச் சத்தம்
வீடெல்லாம் ஒரே குசுகுசுப்பு
செத்தை இடுக்கினால் நோக்கினேன்
அரிக்கன் லாம்புகள் நடமாட்டம்
அம்மாவும் அவசரமாக ஏதோ சொன்னாள்
கையில் புத்தகம் தானாக மூடியது
இதயம் ஒரு தடவை நின்று இடித்தது
கண்ணிரண்டும் நீர்க்குளமானது
நாளை விடிந்தால் பரீட்சை ஆரம்பம்
இரண்டு வருடமாய் கண்விழித்த படிப்பு
இரண்டு நிமிடத்தில் கனவானது
பக்கத்து வீட்டுப் பள்ளித்தோழன்
செல் பட்டு சிதறிய செய்தி கேட்டு

## செவ்வாழை வெளியீட்டுக்குழு

ஆலோசகர்கள்

திரு மு. தவராஜா (அதிபர்)
அருட்சகோதரி சிறியபுஸ்பம் (உபஅதிபர்)
செல்வி சீ. லோகேஸ்வரி (மலர் ஆசிரியை)

உறுப்பினர்கள்

செல்வி மு. இந்திராதேவி
திரு த. தர்மபாலன்
திரு பா. கணேசமூர்த்தி
திரு ச. மகேஸ்வரம்
திருமதி பா. வாமதேவன்
திருமதி யோ. வர்ணகுலசிங்கம்
செல்வி சி. அனட்

# இலங்கையின் சூழல் மாசடைதலும் அதன் விளைவுகளும்.........

தொகுப்பு : இ. குணதீபராஜ்
ஆண்டு - 8 வீ

இன்றைய 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தனது பொன்விழா சுதந்திரத்தை கொண்டாடும் எழில் நாடன இலங்கையில் சூழல் மாசடையும் முறைகள் பெருகுகின்றன.

முதலாவதாக இங்கையின் இனப்பிரச்சனை காரணமாகும். ஏனெனில் இரு தரப்பும் மோதும் போது ஏற்படும் வெடியோசையும், தீ வைப்பும் காரணமாகும். எனின் அவற்றால் ஏற்படும் தீய வாயுக்களால் சூழல் வாயுச் சமனிலை குழம்புகின்றது.

அடுத்ததாக எமது தலைநகரான கொழும்பில் உள்ள நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகளிலும் கைத்தொழில் நிலையங்களிலும் இருந்து வெளியேறும் கழிவுகளான புகை, கழிவுநீர் என்பன மக்கள் சுவாசிக்கும் வளியிலும் கலந்து கொள்வதுடன் கழிவு நீர் மக்கள் பயன்படுத்தும் நீரிலும் கலந்து கொள்வதால் தீங்குள்ளதாக மாற்றப்படுகின்றன. இதனால் சூழல் மாசடைகிறது.

மூன்றாவது அனல் மின்னுற்பத்தியாகும் அனல் மின்னுற்பத்திக்கு எரிபொருளாக விறகுகளை வெட்டி எடுக்கிறார்கள் இதனால் இலங்கையில் பொழியும் மழையின் அளவுகுறைவடைகிறது. கழிவு, எண்ணெய்கள், கழிவு வாயுக்கள் என்பனவும் வெளியே விடப்படுவதால் அவை மக்கள் பயன்படுத்தும் நீர் வளியில் சேர்ந்து சூழலை மாசடைய செய்கிறது. மற்றும் காடழிப்பால் வரட்சியும், விலங்குகளின் புகலிடமும் அழிக்கப்படுகின்றது.

இறுதியாக இன்று கிழக்கு மாகாணத்தில் சிறு கைத்தொழிலாக முருகைக் கல் அகழ்தல் இடம் பெறுகிறது. இதனால் மண்ணரிப்பு உண்டாகும். இலங்கையில் சிறந்த உல்லாசமான இடமாக பாசிக்குடா கடற்கரை ஒரு விரிகுடாவாகையால் அங்கு உண்டாகும் புயல் முருகைக் கல் அகழ்தல் காரணமாக உக்கிரமாகி அகழ்ந்து எடுத்த கல்லை வெப்பமேற்றும்போது ஏற்படும் தீய வாயுக்களால் வாயுச்சமனிலை குழம்பும். இதனாலும் சூழல் மாசடையும். இப்படியாக தீங்குள்ள வாயுக்களை சுவாசிப்பதால் மாரடைப்பு உண்டாகும் மற்றும் வேறு விதமான வாயு சம்பந்தப்பட்ட நோய்கள் உண்டாகும். காடுகளை அழிப்பதால் இலங்கையின் எழில் குறைந்து வரட்சி உண்டாவதால் உல்லாசப் பயணிகளின் வருகை குறைவடையும். இதனால் நாடு பொருளாதாரத்தை இழந்து தவிக்கும். ஆகவே இதற்கேற்ப நடவடிக்கைகள் எடுத்தால் நன்மை பயக்கும்.

**வந்தபின் காப்பதை விட வருமுன் காப்போம்.**

# இந்தஊர் எங்கள் வாழையூர்

வாழையூர் தனிலே சோலையூர்
வாழுமூர் வாழ்த்துமூர் வணங்குமூர்
கல்வியூர் கலையூர் கரும்பூர்
எறும்பூர் விரும்பூர் - இந்தஊர்
எங்களூர் வாழையூர் !

பதியூர் உறையூர் எங்களூர்
பக்தியூர் சித்தியூர் முத்தியூர்
பாலூர் பணியூர் பகையூர்
புதுமையூர் பதுமையூர் — இந்த ஊர்
எங்களூர் வாழையூர் !

அகதியூர் காக்குமூர் காவலூர்
வந்தவூர் தஞ்சமூர் தங்குமூர்
வாசமூர் நேசமூர் வாழையூர்
வாழுமூர் வளமூர் — இந்தஊர்
எங்களூர் வாழையூர் !

சந்தையூர் தந்திடும் விந்தையூர்
சமையலூர் சமயலூர் சகிக்குமூர்
பெங்களூர் போலவூர் எங்களூர்
புகழுமூர் திகழுமூர் — இந்தஊர்
எங்களூர் வாழையூர் !

மக்களூர் மனையூர் மகிழுமூர்
மண்ணூர் மழையூர் மணியூர்
சொர்க்கமூர் என்றார் சொல்லுமூர்
சொந்தஊர் சொந்தஊர் — இந்தஊர்
எங்கள் வாழையூர் !

**T. இளங்கோ** ( ஆசிரியர் )
மட்/வாழைச்சேனை. இந்துக்கல்லூரி

# இனியேனும் ஏதேனும் செய்தாக வேண்டும்

ஆக்கம்: கு. கிறிஸ்ரி சுதர்சன்
தொண்டர் ஆசிரியர்

செவ்வாழை குலை தள்ளி
தேன் இனிய பழந்தந்து மடியும்
செவ்வானம் ஒளி பரப்பி
செங்கதிரோன் அழகுடனே விடியும்
செவ்வாடை குளிர் தந்து
சேர்ந்த வெயில் தணித்து படியும்
செவ்வாகை மலர் மலர்ந்து
சிறப்பில்லாக் கோழைகளைக் கடியும்

இன்றைய இளைஞனே எம் நாட்டிற்கு
நீ என்ன செய்தாய் யோசி.

தெருவோரம் கூடி நிற்போம்
தேவையில்லாக் கதைபேசி காலத்தை விற்போம்
கருவிலே வளர்த்த அன்னை தந்தை
கணக்கில்லாக் கவலை அடையச் செய்யும் விந்தை
ஒருவேலையும் செய்வதேயில்லை
உருப்படியாய் வீட்டை உயர்த்தவுமில்லை
தருகின்ற பணத்தை வீண் செலவிட்டே
தறுதலையெனப் பெயர் பெறுவதில் மகிழ்வுண்டோ.

இன்றைய இளைஞனே எம் நாட்டிற்கு
நீ என்ன செய்தாய் யோசி.

நடந்தது நடந்ததாய் இருக்கட்டும்
நடப்பது நல்லதாய் நலிவின்றிப் பெருகட்டும்
கடந்த காலம் பால் விளைநிலம்
அதில் கற்கின்ற பாடமாய் நடுவது பழமரம்
திடமான மனத்துடனே உறுதி
தீங்கில்லா வழிதன்னைக் காண்போம் நலன் கருதி
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
காண்போம் இனியில்லை எதற்குமே தட்டுப்பாடு

இன்றைய இளைஞனே எம் நாட்டிற்கு
இனியேனும் ஏதேனும் செய்தாக வேண்டும்.

# இனியும் மனிதப் பிறவி தேவையா?

ஆக்கம்: திரு. த. தர்மபாலன் (ஆசிரியர்)
மட் / இந்துக்கல்லூரி
வாழைச்சேனை.

உலகம் உனது கையில் அதை இழப்பதும் அதன்மீது அன்பு வைப்பதும் உனது விருப்பம். உனக்கு இவ்விடயம் சார்பாக கட்டளையிட வல்லவர் இவ்வுலகில் உன் மனச்சாட்சியைத் தவிர எவருமிலர். நீ விரும்பினால் இவ் வுலகை நீயும், உனது சுற்றமும், உனது சந்ததிகளும் பயன்படக் கூடியவாறு ஆக்கிக் கொள்ளலாம் அல்லது உனது முடிவுக்கிடை யில் அதை கெடுத்து விடலாம். உன்னைத் தடுக்க யாருளர். நீயே அதுவாக இருக்கின் றாய்.

தந்தை இறந்த பின்புதான் தந்தையின் அருமை, பெருமைகளை தனயன் உணர்வான் என்பது போல இயற்கை எழில் மிக்க, இரம் மியமான இவ்வுலகை இழந்த பின்புதான் இப் பூவுலகின் அருமை, பெருமைகளை இப் புவிமாந்தர்கள் உணரப்போகின்றார்கள். கெட்ட பின்பு ஞானம் பிறப்பதால் ஏது பயன்.

''சிறுதுளி பெருவெள்ளம்'' என்றார்கள் எமது முன்னோர். பல சிறிய நல்ல செயல்கள் ஒரு பெரிய வெற்றிக்கு வித்திடுவது போல பல சிறிய தீய செயல்கள் ஒரு மாபெரும் அழிவிற்கு வித்திடுகின்றன என்பதை சொல்லாமல் சொல்லியுள்ளார். இதனை இதிகாசங்களும், புராணங்களும் பெருப்பித்து தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

தான் கெட்ட குரங்கு தவவனம் முழு வதையும் அழித்தாற்போல் நல்ல விடயங்கள் கூட தீயவர்கள் கைக்கு செல்லும் போது அவை தீயநோக்கத்திற்காக பயன்படுத்தப் பட்டு நல்லவர், தீயவர் அனைவரையும் இறு தியில் அழித்து விடுகின்றது. உதாரணமாக ஓட்டோகான் என்ற விஞ்ஞானி 1939இல் ''அணுக்களைப் பிரிக்கலாம்'' என்ற ஒரு நல்ல செய்தியை வெளியிட்டதன் விளைவு 1945 இல் கெரோசிமா நகரில் மாத்திரம் ஒரு இலட்சத்து நாற்பதினாயிரம் அப்பாவி மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. மேலும் தற்பொழுது நாடுகளுக்கிடையில் 'அணு குண்டு' அச்சுறுத்தல் ஏற்படவும், பாரிய அழிவுகள் புவிமீது ஏற்படவும் இக் கண்டு பிடிப்பு வழிகோலியுள்ளது.

இப்படியாக ஒவ்வொரு மனித செயற் பாடுகளும் ஆரம்பத்தில் நல்லவை போன்று தோற்றமளித்துக் கொண்டிருப்பதால் அச் செயற்பாட்டிற்குரியவர்களை கௌரவப் படுத்துவதிலும் மனித குலம் பெருமைப்படு கின்றது. அதன் பின்னர் அச்செயற்பாடு என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படு கின்றது எனவும் அதனால் ஏற்படப்போகும் பிரதிகூலங்கள் சார்பாக எவ்விடயத்திலும் மனிதகுலம் பெரிதாக அக்கறை காட்டுவ தில்லை. பிரயாணம் செய்கின்ற வாகனத்தை கொழுத்திவிட்டு அவ்வாகனத்திலே பிரயா ணம் செய்வது போல மனிதகுலம் புவியை அழித்துக்கொண்டு அப்புவியிலே வாழ்க் கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றது.

இப் பாரினில் உள்ளோரை விஞ்ஞானி கள், கல்வியாளர்கள், சமூகத்தலைவர்கள், தத்துவவாதிகள், அரசியல் வாதிகள், புரட்சி வாதிகள், ஆன்மீகவாதிகள், பாமர மக்கள் என பல்வேறு வகை வகையாக பிரித்துச் செல்வதில் மனிதகுலம் பெருமைப்படுகின்றது இவர்கள் எல்லோரும் ஒருகுடையின் கீழ் உள்ளவர்கள், ஒரு குட்டையில் ஊறிய மட் டைகள். உளரீதியில் இவர்களுள் வேறுபாடு கள் உள்ளனவேயன்றி உடல்ரீதியில் அல்ல.

ஒவ்வொரு குழுக்களும் ஏதோ ஒரு வகை யில் மற்றைய குழுக்களை அல்லது அக்குழு அங்கத்தவர்களிடையே குழப்பத்தை ஏற்ப டுத்திக் கொண்டிருக்கின்றன. மனித குலத்

தையும், இப்பாரினையும் காக்க புறப்பட்ட இவை படிப்படியாக மனித குலத்திற்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தி அவற்றை அழிப்பதையும், பாரினைக் கெடுப்பதையுமே செய்யாமல் செய்து கொண்டிருக்கின்றன. அழிவின்மூலம்பாதுகாப்பை தேடுகின்றார்கள் அக்கிரமத்தின் மூலம் அன்பை ஏற்படுத்த முயலுகின்றார்கள்,போரின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முயலுகின்றார்கள், அடிமைத்தனத்தின் மூலம் விடுதலையை பெற்றுதர முயலுகின்றார்கள், கட்டளைகள் மூலம் கடவுள்பக்தியை ஏற்படுத்தமுயலுகின்றார்கள் பொய்யானவார்த்தைகள் மூலம் உண்மையை நிரூபிக்க முயலுகின்றார்கள். படுகொலைகள் மூலம் ஜீவகாருண்யத்தை ஏற்படுத்த விளைகின்றார்கள், அநீதிகள் மூலம் நீதியை நிலைநாட்ட துடிக்கின்றார்கள். அழுக்குப்பிடித்த இதயத்தின் மூலம் ஆன்மீகப்பேச்சு பேச விளைகின்றார்கள். முரட்டுக் கரங்களின் மூலம் அன்பான அரவணைப்பு இப்படியே மனித குலத்தின் செயற்பாட்டால் பல்வேறு சலனங்கள் தொடருகின்றன.

ஓசோன் படையில் துளைகள் ஏற்பட காரணகர்த்தா யார்? பச்சை வீட்டு விளைவு ஏற்பட காரண கர்த்தா யார்? அமில மழை ஏன் பொழிய வேண்டும்? சுற்றாடல் ஏன் மாசுபடுத்தப்பட வேண்டும்? விலங்கினங்கள் ஏன் அரிதாக வேண்டும்? காடுகள் ஏன் அழிக்கப்படவேண்டும்? இப்புவியில் உயிரினங்களின் வாழ்விற்கு ஏன் அச்சுறுத்தல் ஏற்பட வேண்டும்? இவை எல்லாவற்றிற்கும் காரணகர்த்தா யார்?

எல்லோரும் தம்மளவில் சிறுசிறு பிழைகளைச் செய்து கொண்டே பிழை ஏதும் செய்யாதவர்கள் போல ஊருக்கு உபதேசம் செய்தபடி தமக்குரிய விதிவிலக்கை தேடிக் கொண்டு காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படியாக ஒவ்வொருவரும் விதிவிலக்கை தேடிக்கொள்ளும் போதுதான் விதிவிலக்குகளே மிகப் பெரிய விடயமாக உருப்பெறுகின்றது.

இப்பாரினிலே இவ்வாறான நிகழ்வுகள் நிகழ்வதற்கு உண்மையான பாத்திரவாளியார் கடவுளா அல்லது உலகமாதாவா அல்லது மனச்சாட்சி உள்ள மனிதனா அல்லது சத்துவ குணமுடையனா அல்லது இராஜகுணம் கொண்ட மனிதனா அல்லது மனச்சாட்சியே இல்லாத மனிதனா அல்லது விலங்குக் குணம் கொண்ட மனிதனா இனியும் மனிதப் பிறவி இவ்வுலகிற்கு தேவைதானா

மனிதா மனிதம் எங்கே?
இறைவா, இப்பொழுது தெரிகின்றதா உம்மையும்.

அழிக்க புறப்பட்டு விட்டான் இவ்வுலக உயர்ந்த மனிதன்

தொகுப்பு : ( வானொலி, பத்திரிகை )
க. கிருஷ்ணமேனன்
கலைப்பிரிவு 13 ( 1998 )

| பெயர் | நாடு | சென்ற ஆண்டு மா/திகதி |
|---|---|---|
| 01. ஆலன்ஷெப்பர்ட் | அமெரிக்கா | 1961 / 05 / 05 |
| 02. யூரிகாரின் | சோவியத்யூனியன் | 1961 / 04 / 12 |
| 03. வர்ஜில் கிரிஸ்ஸோம் | அமெரிக்கா | 1961 / 07 / 21 |
| 04. ஜேர்மன் டிட்டோங் | சோவியத்யூனியன் | 1961 / 08 / 06 |
| 05. ஜான் கிளென் | அமெரிக்கா | 1962 / 02 / 24 |
| 06. மால்கம் கார்பென்டர் | அமெரிக்கா | 1962 / 05 / 24 |
| 07. ஆண்ட்ரியன் - நிக்கோலயேவ் | சோவியத்யூனியன் | 1962 / 08 / 11,15 |
| 08. பாவெல்பபோவிக் | சோவியத்யூனியன் | 1962 / 08 / 12, 15 |
| 09. வால்டர்ஷிரா | அமெரிக்கா | 1962 / 10 / 03 |
| 10. வாரி கூப்பர் | அமெரிக்கா | 1963 / 05 / 15, 16 |

## சூப் பேஸ்ரீ [சிற்றுண்டி]

திருமதி. பா. வசந்தகுமார் (ஆசிரியை)
இந்துக்கல்லூரி

### தேவையான பொருட்கள்

கோதுமை மா - 100 கிராம்
மாஜரீன் - 50 கிராம்
முட்டை - 2
நீர் - 1/8 லீற்றர்

செய்முறை:- கோதுமை மாவை அரித்தெடுக்கவும். மாஜரீனை அடுப்பில் வைத்து சூடாக்கி அதனுடன் நீரைச் சேர்த்து கொதிக்க விடவும். கொதித்து வரும் போது மாவைச் சேர்த்து கிண்ட வேண்டும். பின்னர் இறக்கி தட்டையான பாத்திரத்தில் ஆறவிட வேண்டும். நன்றாக ஆறியதும் முட்டையை ஒவ்வொன்றாகச் சேர்த்து அடிக்க வேண்டும். நன்றாக அடித்து பின் ஐசிங் அச்சில் போட்டு விரும்பிய வடிவங்களில் செய்து வெண்ணெய் தடவிய பேப்பரில் வைத்து கேக் றேயில் வைத்து கனல் அடுப்பில் சுட்டு எடுத்து விரும்பிய அலங்காரம் செய்து குளுக்கறோஸ் துண்டுகளை அலங்கரிக்கலாம். பிறந்த நாள் கொண்டாட்டம் போன்றவற்றிற்கு பயன்படுத்தலாம்.

## சொக்கலட் மோஸ் [ஈற்றுணா]

### தேவையான பொருட்கள்

முட்டை 15
சீனி 200 கிராம்
சண்குயிக் 40 மி லீ
தோடம்பழத்தோல் 1 மேசைக்கரண்டி (வெள்ளைத்தோல்)
விறண்டி அல்லது வைன் 1/8 கிளாஸ்
சொக்கலட் 1 சிலப்
ஜெலற்றின் 40 கிராம்
இளம்சூட்டு நீர் 1/8 லீ
பிறஸ்க் கிறீம் 1/2 லீ (அல்லது அங்கர் 200 கி)

செய்முறை;-

1. முட்டை மஞ்சட்கரு வேறாகவும் வெள்ளைக்கரு வேறாகவும் பிரித்தல்.
2. முட்டை மஞ்சட்கருவை 100 கிராம் சீனி சேர்த்து நன்றாக அடித்தல்.
3. சொக்கலட்டை துண்டுகளாக்கி சிறிது நீர் விட்டு கிறீம் கலவை செய்தல்.
4. சொக்கலட் கலவையை அடித்த மஞ்சட் கருவுடன் சேர்த்தல்.
5. ஒரு பாத்திரத்தில் முட்டை வெள்ளைக்கருவையும் மிகுதி 100 கிராம் சீனியையும் சேர்த்து அடித்தல்.
6. இரு கலவைகளையும் சேர்த்து மரக்கரண்டியினால் பிரட்டுதல்.
7. பிறஸ்கிறீம் அல்லது அங்கரை (சிறிது நீர் விட்டு) நன்றாக அடித்து இக்கலவையுடன் சேர்த்தல்.
8. சண்குயிக், விறண்டி இரண்டையும் சேர்த்து பிரட்டுதல்.
9. ஜெலற்றினை இளஞ்சூட்டு நீரில் கரைத்து இக்கலவையுடன் சேர்த்தல்.
10. நெய் தடவிய பாத்திரத்தில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்து வெட்டிப் பரிமாறலாம்.

# நாயின் சுயசரிதை

ஆக்கம்: வா. சத்தியா
ஆண்டு - 5

நான் இப்போது இந்த குப்பை மேட்டில் படுத்துக் கிடக்கிறேன். சிலர் விசர்நாய் என்கின்றனர். இன்னும் சிலர் நொண்டி என்று சொல்லி கல்லால் எறிகின்றனர். இவர்கள் எனது இளமைப் பருவ வாழ்க் கையை அறிவார்களாயின் இப்படிச் செய் வார்களா? நான் கண்டியிலுள்ள எஜமானின் வீட்டில் பிறந்தேன். எனது தாய் என்னுடன் ஒரே சூலில் ஐந்து குட்டிகளை ஈன்றாள். நாங்கள் ஐவரும் அவ்வீட்டில் மகிழ்ச்சிக் கடலில் நீந்தி விளையாடுவோம். நாட்கள் உருண்டோடின. நாங்களும் நாளும் பொழு தும் நன்றாக வளரத் தொடங்கினோம். ஒரு நாள் படகு போன்றதோர் கார் காற் றிலும் கூடிய வேகமாக வந்து எங்கள் வீட்டின் முன் நின்றது.

அதிலிருந்து ஒய்யாரமான உயர்ந்ததோர் மனிதர் கழுத்தில் ''ஸ்டெதலகோப்'' தொங்க இறங்கி கம்பிரமாக நடந்து வந்து எங்கள் வீட்டின் முன் வராந்தாவில் ஏறி னார். நாங்கள் ஐவரும் ஓடிச் சென்று அவரை மோப்பமிட்டோம். அழைப்புமணி அலறிய தும், எஜமான் வந்து வந்தவரை வரவேற் றார். பின் அவரைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்றார். நாங்களும் எஜமா னின் அறையுள் நுழைந்தோம். வந்தவர் எங்கள் ஐவருள் என்மீதே தன் கண் பார் வையை அடிக்கடி செலுத்தினார். இறுதியில் அவர் செல்லும் போது எஜமானிடம் என் னைத் தரும்படி கேட்டார். அதற்கு எஜமா னும் இணங்கினார். பின் தான் புறப்படும் போது என்னையும் தூக்கிச் சென்றார். காரினுள் என்னை ஏற்றி கதவை மூடக் கார் வேகமாகச் சென்றது.

கார் டாக்டரின் வீட்டை அடைய என்னை உள்ளே அழைத்துச் சென்றனர். வீட்டில் இருந்த அனைவரும் என்மீது அளவு கடந்த அன்பை அள்ளிச் சொரிந்தார்கள். என்னை ''லைக்கா'' எனப் பெயரிட்டு அழைத்தார்கள். அவர்கள் வீட்டில் நேரந் தவறாமல் உணவு, நல்ல குளிப்பு வேண்டிய நேரம் வீட்டு அறைக்குள் சென்று வர அனுமதி அதுமட்டுமல்ல இரவில் மெத்தை யில் நான் நித்திரை செய்வேன். வீட்டுக் காரர் உல்லாசமாக செல்லும் போது என்னையும் கூட்டிக் கொண்டு செல்வார் கள். சிலவேளை காரிலும் செல்வேன். சில நேரங்களில் பிள்ளைகளோடு பந்து விளையா டுவேன். காலம் உருண்டோடியது.

ஒருநாள் காரொண்டில் அடிபட்டு ஒரு காலை இழந்து ஊனமானேன். அதன் பிறகு வீட்டுக்காரர் அக்கறையாகக் கவனிப் பது குறைவு. டாக்டர் குடும்பத்தினர் வேறு வீட்டுக்கு மாறிச் செல்லும் போது என்னைக் கூட்டிச் செல்லவில்லை. நானோ பசியால் உணவு தேடி மூன்று காலினால் தெத்தித் தெத்தி நடந்த போது ஏதோவொரு வாகனத் தினால் மீண்டும் அடிபட்டுக் குப்பைமேட்டில் எறியப்பட்டேன். எப்போது எமன் வருவான் என்னுயிரை கவர்ந்து செல்வான் என எண் ணுகிறேன். விதி வரைந்த சாலை வழியே வாழ்க்கை ஓடுது என எண்ணி விதியை நொந்து படுத்துக் கிடக்கிறேன், மற்றவர்கள் இதனை அறிவார்களா?

# அன்புக் கனிக்காக

ஆக்கம்: எஸ். ஜெயந்தன்
ஆண்டு - 12 வர்த்தகம்

''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்''

அன்பு என்பது இந்த உலகத்தில் வாழும் அனைத்து ஜீவராசிகளிடமும் பரந்து காணப்படுகின்ற ஒன்றாகும். இந்த பிரபஞ்சம் முழுவதும் அன்பு மூச்சே அடங்கி இருக்கின்றது. இந்த உலகத்தில் காணப்படும் ஓவ்வொரு உயிரினது வாழ்க்கை வட்டத்தினை எடுத்துக் கொண்டால் அவற்றில் அன்பின் வடிவமே சுழன்று கொண்டு இருக்கின்றது. சிறிய எறும்பு முதல் மனிதன் வரை பிரமிதம் அடைந்து கொண்டு வருகிறது. இந்த அன்பானது பகுத்தறிவாகிய மானிடனின் மனதுக்குள் ஒரு படி மேலே சிறப்பாக அமைந்துள்ளது. வேறு உயிரினங்கள் கொண்ட அன்பானது வரையறை கொண்ட கட்டுப்பாட்டை மீறினால் விலகி விடும். ஆனால் மானிடனோ எவ்வளவு தூரம் விலகி இருந்தாலும் அன்பு காட்ட ஆர்வம் கொண்டு நெருங்கிச் செல்கின்றான். அதனால் இந்த மானிட அன்புக்கு வரையறை கிடையாது இந்த அன்பானது காதல் நட்பு பிரியம், கருணை, பாசம் உறவு எனும் சிறப்பான பாத்திரங்களால் பிரயோகிக்கப் படுகின்றன. இந்த உலகத்திலே அன்பினால் வந்த விளைவுகளாக எத்தனையோ சரித்திரங்கள் உள்ளன. இதயம் கொடுத்த தாய், ஷாஜகான் கட்டிய தாஜ்மகால், குசேலர் கண்ணன் நட்பு, பாரி வள்ளல் கொடுத்த தேர் போன்ற உண்மைச் சம்பவங்கள் எத்தனையோ இந்த மாசற்ற அன்பினால் வந்த விளைவாகும்.

நன்றாக சற்று சிந்தித்து ஆராய்ந்து பார்த்தால் அன்பு என்பது ஒவ்வொரு உயிரினத்தினது மனத்திலும் ஒரு பிரகாரம் கொண்ட பாரிய சக்தியாகும் இந்த சக்தியானது ஞானிகளிடத்தில் மிகவும் சிறப்பாக வெளிப்பட்டு காணப்படுகின்றது. அதற்குக் காரணம் அவர்கள் அன்பினை ஒருசக்தியாக நினைத்து மேம்படுத்தி மெருகூட்டுகிறார்கள். அதனால் தான் ஒரு சாதாரண மனிதன் அந்த ஞானியினது நிழலை அடைந்த ஒரு கணப்பொழுதில் முழு மனிதனாக மாற்றம் அடைகிறான். ஞானி ஒருவர் கூறுகின்றார். ஒருவர் ஒருவர் மீது கொண்ட மாசற்ற அன்பானது, அவர் எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தூரத்தில் இருந்தாலும் அவரைச் சென்றடைந்து, அவரை நல்வழிப் படுத்தி அவரது வாழ்வை சிறப்பாக அமைத்து அவருக்கும் அன்பைப் போதித்து அவரது மனதிலும் தூய்மையான அன்பை வளரச் செய்கிறது. ஆதலால் நமது தூய்மையான மனதில் சிறந்தசிந்தனையோடு தூய்மையான அன்பை வளர்ப்பதனால் நாம் மட்டும். அன்றி இந்த பிரபஞ்சம் முழுவதும் நன்மை பெறும். நாம் தற்பொழுது இந்தக் கலியுகத்தில் இந்த ளவுக்கு சிறப்பாக வாழ்வதற்குக் காரணம் நம்மிடையே உள்ளோர் கொண்ட மாசற்ற அன்பினால் தான். எனவே கனி போல கிடைத்திருக்கும் நமது அன்பு மனதைத் திறந்து அதன் சக்தியை வெளிக் கொணர்ந்து இந்த பிரபஞ்சம் முழுவதும் சிறப்புற வாழ்வோமாக.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு''

யானையின் தந்தங்கள் உள்ளிருந்து வெளியே நீண்டு வருகின்றன ஒரு பொழுதும் அவை திரும்ப உள்ளே செல்வதில்லை. அதே போல தான் நாம் உதிர்த்து விட்ட சொற்களும் கூட.

— சுவாமி விவேகானந்தர்

# டாக்டர் டி. பி. ஜாயா

தொகுப்பு: ந. ரஜந்தன்
ஆண்டு - 6 சீ

1890ம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி கலகெதர என்னும் இடத்தில் டாக்டர் டி. பி. ஜாயா பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் துவான் புர்கானுதீன் ஜாயா என்பதாகும்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை கொட்டான்சேனை எஸ். பி. ஜீ. பாடசாலையில் கற்றார். கல்வியில் மிகத் திறமையுடையவராகக் காணப்பட்டார். கற்கும் காலத்தில் பல பரிசில்களைப் பெற்றார்.

1910ம் ஆண்டு கண்டியில் உள்ள தருமராஜா கல்லூரியில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். 1916 ம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழக பீ. ஏ. பரீட்சையில் சித்தி அடைந்தார். 1917 ம் ஆண்டு கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். சட்டப்படிப்புப் படித்தார். இவரின் திறமையை அறிந்த சாஹிராக் கல்லூரி நிருவாகிகள் அதிபர் பதவியை இவருக்கு அளித்தனர். அக்காலம் தொட்டு சாஹிராக் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

1924 ம் ஆண்டு இலங்கைச் சட்ட நிருபண சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். அத்துடன் அனுத்கம்ப, புத்தளம், மாத்தறை, கம்பளை ஆகிய இடங்களில் சாஹிராக் கல்லூரியின் கிளைகளை ஆரம்பித்தார்.

1935ம் ஆண்டு தொடக்கம் 1947ம் ஆண்டு வரை அரசாங்க சபை அங்கத்தவராக கடமையாற்றினார். பின்னர் 1950ம் ஆண்டு வரை தொழில் சமூக சேவை மந்திரியாகவும் கடமையாற்றினார். பின்னர் பாகிஸ்தானில் இலங்கைத்தூதுவராக நியமிக்கப்பட்டார். 1951ம் ஆண்டு பாகிஸ்தான் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கியது. 1950ம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவரானார்.

இஸ்லாம் சமயத்தில் ஈடுபாடுடைய இவர் ஹஜ் யாத்திரைக்காகச் செல்வோர் தங்குவதற்கு மக்காவிலே இலங்கை இல்லமொன்றை கட்டுவிக்க முயற்சி செய்தார். 1960 ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# படைக்க மறந்த தேனோ

ஆக்கம்: பொ. வினோகரன்
ஆண்டு - 13 வர்த்தகம்

படைத்த தெல்லாம் படைத்தான் - இறைவன்
இவ்வுலகினையே படைத்தான்
மலர்களெல்லாம் படைத்தான் - அதில்
நறுமணங்களெல்லாம் படைத்தான்
தென்றலையும் படைத்து - அதில்
மென்மையையும் கொடுத்து
மலர்களிலே உரசி சிறுமுத்தமிட வைத்தான்

புல்வெளியைப்படைத்து - பனித்
துணிகளையும் படைத்து .........
அவ்வெளியின் மீதே அதை
உறங்கிடவும் வைத்தான்
சில்லிடும் நீரோடை அதில் சிரிப்பொலியைக் கொடுத்து
ஆற்றினிலே சென்று அதைச்
சேர்த்திடவும் வைத்தான்
புள்ளினங்கள் பாட பொன் மயிலினங்கள் ஆட .........
மழையிருண்டு வந்து அவை மகிழ்ந்திடவும் செய்தான்

புள்ளியினமான்கள் தினம் துள்ளி விளையாட
பசுஞ்சோலையையும் படைத்தான்
நீலக்கடலலைகள் அவை துள்ளிக்கரைசேர
அதை மடியேந்தி வாங்கும் கரை மண்ணினையும் படைத்தான்
அழகுருவம் கொண்டபல மனிதரையும்
படைத்து ஆறறிவு என்னும் ஒரு
பட்டத்தையும் கொடுத்தான்
நீ படைத்த மனிதனின்று கொலையுருவம்
கொண்டதேனோ
அவனிடத்தில் சமாதானத்தை - நீ
படைக்க மறந்ததேனோ?

★ ★ ★ ★

ஒரு தந்தை தன்னுடைய குழந்தைக்கு வேண்டிய பொருள் செல்வத்தைச் சேர்த்து வைப்பதைக் காட்டிலும் தன் புதல்வனுக்கு கல்வி, வேள்வி, அனுபவம் என்ற இந்த மூன்று அறிவையும் புகட்ட வேண்டும். அப்போது தான் பலர் கூடி இருக்கும் சபையில் அவனால் சிறந்து விளங்க முடியும்.

— திருவள்ளுவர்

# ஒலிம்பிக் என்று பெயர் எப்படி வந்தது?

ஆக்கம்: செல்வன். சதாசிவம் சதீஸ்குமார்
ஆண்டு 10 எச்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க மக்கள் ஒலிபியா என்ற சமவெளியிலே ஐ , ஸ் என்ற தேவதைக்கு விழா எடுத்து வந்தனர். இந்த விழா நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தப்பட்டு வந்தது. இந்த விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. இவ்வாறு நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியே ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி என பின்னர் அழைக்கப்பட்டது.

ஆரம்பகால ஒலிம்பிக்போட்டியில் ஒட்டப்பந்தயம் மட்டுமே இடம்பெற்றது. பின்னர் குத்துச்சண்டை, மல்யுத்தம் போன்ற போட்டிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்களின் தலையில் ஒலிவமரப் பூக்கொத்தாலான முடி சூட்டி கௌரவித்தனர், வெற்றி வீரர்களின் பெயரை நாடு முழுவதிலும் பறைசாற்றி அறிவிப்பது வழக்கமாயிருந்தது,

கி. மு. 8ம் நூற்றாண்டு முதல் நடைபெற்றுவந்த ஒலிம்பிக் போட்டியை கி. பி 394 இல் உரோமாபுரி மன்னர் தடை செய்தார். இத்தனையும் சில ஆண்டுகளின் பின் நீக்கப்பட்டுள்ளது. தற்போது ஒலிம்பிக்போட்டியில் ஓட்டம், உயரம் பாய்தல், தடிஊன்றிப் பாய்தல், நீச்சல், கத்திச்சண்டை துப்பாக்கிச்சுடுதல், பாரந்தூக்குதல், உதைப்பந்தாட்டம் வலைப்பந்தாட்டம் போன்றபலவிதப் போட்டிகள் சேர்க்கப்பட்டன.

1928 ஆம் ஆண்டிலேதான் ஒலிம்பிக் போட்டியில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். விழா ஆரம்பத்தில் ஒலிம்பிக்பந்தம் ஏற்றும் வைபவமும் நடைபெறும்.

---

## பரத மகள் பாடுகிறாள்

ஆடற்கலைக் கழகு
தேடப் புறப்பட்டு
ஆடாத பாவையென
அசைந்தாடும் அரிவையரின்
அழகு நடனம் காண்பதற்கு
ஆயிரம் கண் வேண்டாமோ

பாடலுடன் ராகமும்
தாளமும் சேர்த்து இவள்
பரதம் என்னும் பெயரில் தரும்
பல்சுவைக் கனியமுதை
பருகிட தயங்குதற்கு
பாரினில் யாருள்ளரோ
அவனியர்க்கு

தகதிகுத் தாளத்தில்
தள்ளாடும் நெஞ்சத்தை
தாமரை முக பாவத்தில்
தத்தளிக்கும் உள்ளங்களின்
தாகமதைத் தணிக்காதோ
தன்யாசி ராகமது

ஆக்கம்: திருமதி. அ. சிவநேசராஜா
( ஆசிரியை ,
பட்/ வாழைச்சேனை இந்துக்கல்லூரி

# யுத்தக் கொடுமைகள் (சிறுகதை)

ஆக்கம்: சிவகுரு. ஜெயமாலினி
ஆண்டு - 13 கலைப்பிரிவு

மாதவி தனது திருமணப் படத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு தன் கடந்தகால வாழ்க்கை கண் முன்னே திரைபோட்டது. அப்பொழுது மாதவி ஓர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தாள். குடும்பத்தில் அவள் ஒரே பிள்ளை. அதனால் மிகவும் செல்லமாகவே வளர்க்கப்பட்டாள். இதனால் பாடசாலையிலும் அவளின் குணத்தை அனைவரும் தெரிந்து வைத்திருந்தார்கள். மாதவி எதை நினைத்தாலும் அது நடந்தே தீர வேண்டும் என்பது தான் மாதவியின் குணம்.

அன்று ஓர் வெள்ளிக்கிழமை பாடசாலை விட்டு வந்து மாலை நேரமானதும் கோயிலுக்குச் சென்றாள். அவள் சுவாமியை தரிசித்து விட்டு வரும் போது ஓர் ஆண் பிள்ளை அழுத படி நின்றது. அதனை பார்த்ததும் மாதவிக்கு அனுதாபம் ஏற்பட்டது. அந்த சிறுவனை கூப்பிட்டு ''தம்பி உன் பேர் என்ன? நீ ஏன் அழுகிறாய்'' என்று கேட்டாள். அதற்கு அந்த சிறுவன் ''அக்கா எனக்கு அம்மா, அப்பா இல்லை அவங்கள் வெடிபட்டு இறந்திட்டாங்கள். என்னை என் மாமா தான் பார்க்கிறவர். அவர் சாப்பாடு கூட ஒழுங்காகத் தருவதில்லை அவர் மட்டும் வேளா வேளைக்கு சாப்பிடுவார் எனக்கு பசிக்குது'' என்று அந்த சிறுவன் அழுதான். உடனே மாதவி அவனை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவழித்து அனுப்பி வைத்தாள்.

''ச்சீ இந்த யுத்தத்தால் எவ்வளவு குழந்தைகள் அனாதை ஆகின்றது. எத்தனை பெண்கள் விதவையாகின்றார்கள் இதற்கு ஒரு முடிவே வ்ராதா என்று எண்ணியவளாக தன் அறை நோக்கி நடந்தாள். அப்போது ''மாதவி மாதவி வாம்மா என்ற அம்மாவின் குரலுக்கு அடிபணிந்தவளாக ''இதோ வாறன் அம்மா'' என்று தன் தாய் இருந்த இடத்திற்கு சென்றாள்.

''மாதவி உன்னிடம் முக்கியமான விடயம் ஒன்று பேச வேண்டும் என்று கூறிய தாயை ஆச்சரியத்துடன் பார்த்தாள் மாதவி'' என்ன அம்மா அப்படி என்ன முக்கியமான விடயம் எந்த கோட்டையை பிடிக்க ஆலோசனை தேவை ''என்று சிரித்தபடி கேட்டாள்.'' போடிபிள்ள உனக்கு எப்பபார்த்தாலும் பகிடிதான். நான் எவ்வளவு கவலையாக இருக்கிறன் என்று உனக்கு எங்கே விளங்கப் போகுது என்று கூறிய கமலம் யோசனையில் ஆழ்ந்தாள். ''என்ன அம்மா விளக்கமாகச் சொல்லுங்களன்' எனமாதவி கேட்க ''பிள்ள மாதவி அப்பா உனக்கு மாப்பிள்ளை பார்க்கவாம் உனக்கும் இருபத்தைந்து வயது முடிந்து விட்டது. அதனால் உன்னுடைய சம்மதத்தை கேட்கச்சொல்லி உண்ட அப்பா சொன்னார் என்ற கமலத்தை ''அம்மா நான் இவ்வளவு காலமாக மறைத்த உண்மையை இன்னும் மறைக்க விருப்பவில்லை. அதாவது நான் என்னோடு வேலை செய்கிற ஆசிரியர் ஒருவரை மூன்று வருடமாக விரும்புகிறேன். அப்பாவிடம் சொல்லி நீங்கள் தான் சம்மதம் வாங்கித்தர வேண்டும் என்று மாதவி கூறி விட்டு அவ்விடத்தில் இன்னும் தாமதியாமல் எழுந்து போனாள்.

மாதவியின் தாய் தனது கணவனான சாம்பசிவத்திடம் மாதவியின் விடயத்தை கூற அவரும் தனது மகளின் விருப்பப் படியே மாதவிக்கும் பாலுவிற்கும் மிகவும் சிறப்பாக திருமணத்தை நடத்தி வைத்தார். மாதவி பாலு திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது. அவர்களுக்கு மகேஸ் என்னும் ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சந்தோஷமான செய்தியைக் கேட்டு பாடசாலையில் இருந்து வீடு சென்று கொண்டிருந்த பாலுவை சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். அதன் பிறகு பாலுவின் நிலமை என்னவோ ஏதோ என்று ஒருவருக்கும் தெரி

யாது. அதன்பின் மாதவி தன் குழந்தை மகேஸ்சை வளர்த்து ஒரு டாக்ரராகவோ, ஆசிரியராகவோ ஆக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தனது வாழ்க்கையை தொடர்ந்தாள்.

''அம்மா... அம்மா '' என்று மகேஸ் கூப்பிட்ட சத்தத்தில் சுய நினைவுக்கு வந்தவளாக என்ன மகன் என்று மகனை அணைத்து ஆதரவோடு தடவினாள். ஆம் மகேஸ் இப்போது ஆறுவயதுப் பள்ளி செல்லும் பாலகன். ''அம்மா... நம்ம அப்பா எப்போ அம்மா வருவார். எங்க வகுப்பில் ஒவ்வொருவரும் அப்பாகூட வாராங்க ஏன் அம்மா நம்ம அப்பா இன்னும் வராமல் இருக்கிறார்'' என்று கேட்ட மகேசை தன் மார் போடு அணைத்து அழுதாள். பானு நீங்க மட்டும் நிம்மதியாக எங்க இருக்கிறீர்களோ தெரியாது ஆனால் உங்க பையனுக்கு ஆறு வருடகாலமாக அப்பா வருவார் வருவார் என்று சொல்லி அவனை ஒவ்வொரு நாளும் ஏமாற்றிக் கொண்டே இருக்கிறேன். என்று தன் மனதுக்குள் அழுதாள்.

அப்போது ''அம்மா எங்க பாடசாலையில வாணிவிழா கொண்டாடப் போகிறோம். அதற்கு எங்க வகுப்பாசிரியர் என்னை நாடகத்திற்கு எடுத்து இருக்கார். அதில எனக்கு என்ன வேடம் என்று தெரியுமா அம்மா'' என்று தாயைப் பார்க்க, மாதவி ''எனக்கு தெரியாது நீங்களே சொல்லுங்கள் பார்ப்பம் என்று கூற, ''அம்மா எனக்கு அப்பா அம்மா இல்லாத அனாதைப் பையன் வேடம்'' என்று கூற, மாதவியின் தொண்டையில் ஏதோ ஓர் துக்கம் அடைத்து கொண்டது. சில வருடங்களுக்கு முன் ஓர் அனாதைக் குழந்தை மீது இரக்கப்பட்டோம் ஆனால் இன்று என் குழந்தையும் அப்பா இல்லாத அனாதை ஆகிவிட்டதே என்று அழுதாள். இதை பார்த்த மகேஸ் ''ஏன் அம்மா அழுகிறீர்கள் எனக்குக் கொடுத்த பாத்திரம் கூடாதா'' என்று தாயை கேட்க இல்ல மகன் அது நாடகம் இல்லை இந்த யுத்தத்தால் ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்படும் உண்மைச் சம்பவம் என்று எண்ணி மனம் உருகினாள்.

இப்படியே இந்த யுத்தக் கொடுமை தொடரும் என்றால் மாதவி அனுதாபப்பட்ட பையன், மாதவியின் குழந்தை மகேஸ் மட்டும் அல்ல இன்னும் எத்தனையோ சிறுவர்கள் அனாதைகளாகவும் மாதவியைப் போல் பெண்கள் விதவையாவது உறுதி. இதற்கு ஓர் விடிவு காலம் வரமாட்டதா?

(கற்பனை - உண்மை)

வாழ்க்கை என்பது பணக்காரர்களுக்கு ஒரு நகைச்சுவை நிகழ்ச்சி
முட்டாளுக்கு ஒரு விளையாட்டு, புத்திசாலிக்கு ஒரு கனவு;
ஏழைகளுக்கு கவலை மிக்க ஒரு நிகழ்ச்சி

ஒரு யூதக் கவிஞன்

# கதிரவனே வாழ்க

பொ. வினோதரன்
ஆண்டு - 10 H

ஆதவனாலாழி நீராவியாக்கும்
ஆவி பின் முகிலாகி மழையாய் பெய்யும்
ஆதலினாலாகிலு மெலாஞ் செழித்து நல்ல
அறுவடையால் விவசாயியுயர்ந்து நிற்பான்

செய்நன்றி கொன்றவர்க்கு உய்வேயில்லை
செப்பினார் குறள்தந்த செந்நாப் போதார்
மெய்யென்று கதிரவனுக்குரிய நன்றி
மேதினிற் செய்வதுதான் பொங்கலம்மா

தைத்திங்கள் முதலாம் நாள் தமிழரெல்லாம்
தலைமுழுகிப் புத்தாடை தரித்துப் பூவும்
வைத்தெங்கும் வழம்பொங்க இல்லந்தன்னில்
வனப்புமிகு நிறைகுடங்கள் பொலிவாய் வைத்து

அறுகம்புல் சாணமதாலைங் கரன்றன்
அருளுகுவை யமைத் தருகில் மர்த்தி வைத்து
மறுகணமே வாசல்தணிற் கோலமிட்டு
மனைதன்றிற் திருமகளின் வரவைக் காண்பார்

வாசலெல்லாம் மாவிலையும் பூவும் கொண்டு
வாசமிகு தோரணங்கள் தொங்க விட்டு
பாசமுள மக்களுடன் கூடிவானம்
பட்டாசுங் கொழுத்திடுவார் ... பட் ... பட் ... படீர்

முற்றமதிற் கல்நட்டு அடுப்பு மூட்டி
மலர்கொண்டு பானைக்கு மாலை சூட்டி
குற்றமறத் திருநீறு சந்தணங்கள்
குழைத்தழகாய்ப் பூசியதில் பாலுமூற்றி

வைத்திடுவார் அடுப்பினிலே பானைதன்னை
வளைத்தங்கு வழிந்திடுமே பாலும் பொங்கி
இத் திருநாள் தனிலதனை நுகர்ந்து இன்பந்
தந்திடவே வந்திடுவான் கதிரோன் வானில்

புத்தரிசி சர்க்கரையும் பயறும் போட்டு
பழவகையும் கற்கண்டு தேனுமிட்டு
முத்தமிழ் போலினிதான பொங்கல் பொங்கி
மகிழ்ந்திடுவாராயவரோ டிணைந்து மாதர்

நிறைவாகப் பொங்கல்தனைப் படைப்பாரங்கே
நிறை குடத்தின் முன்பாக இலையும் போட்டு
குறையின்றி வெற்றிலையும் பாக்கும் நன்கு
கணத்த முக்கனிகளையும் வைப்பார் சேர்த்து

ஆடவர்கள் காட்டிடுவார் தூபதீபம்
அனைவருமே துதித்திடுவார் பாடல்பாடி
கூடவருமவசரந்தான் குழந்தைக் கெல்லாம்
கூடியே பொங்கல் தனை உண்ணவன்றோ

உண்டபின் பொங்கல்தனைச் சிறார்களன்று
உறவினர்களயலவர்கள் நண்பர்க்கெல்லாம்
கொண்டதனைக் கொடுத்திடுவார் ரோடியோடி
களைப்பினிலும் களித்திடுவார் பொங்கலன்று

பசிக்காது தைப்பொங்கல் நாளில் யார்க்கும்
பருகிடுவர் காரமுடனிர சந்தன்னை
புசிக்காது விட்டிடுவர் சோற்றையன்று
பொங்கலதை வயிறார உண்டதாலே

உழவர்களின் திருநாளாம் பொங்கலின்று
உலகெலாமுளதமிழர் பெருநாளன்றோ
கிழவர்களுங் கொண்டாடிக் குதூகலிக்கக்
காரணியாம் கதிரவனே வாழ்க வாழ்க

## கணித வாழ்க்கையின் பத்து அம்சங்கள்

01. நல்லவற்றைக் கூட்டிக்கொள் - +
02. தீயவற்றைக் கழித்துக் கொள் - —
03. அறிவைப் பெருக்கிக் கொள் - ×
04. நேரத்தை வகுத்துக்கொள் - ÷
05. இன்பதுன்பங்களைச் சமம் எனக் கருது - =
06. வளர்பிறை போல் அறிவில் வளரு - ++ -
07. செலவைக் குறைத்து வரவைப் பெருக்கு - <
08. அன்பைப் பெருக்கி ஆணவத்தைக்குறை - >
09. நல்லவர்களுக்கு இணையாக இரு - ||
10. பிறரை நம்பி வாழும் வாழ்வு நிலையற்றது - ±

ஞா. ஞானருஜினி
ஆண்டு - 13 கலை

# காந்தியின் கல்விக்கொள்கை — ஓர் ஆய்வு

ஆக்கம் : செல்வி மு. இந்திராதேவி (ஆசிரியை)
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

தத்துவ ஞானிகளுள் மகாத்மா காந்தி விசேட இடத்தை வகிக்கின்றார். தேசிய உணர்வு கொண்ட நாட்டுத் தலைவராகவே பெரும் புகழ் பெறுகின்றார் உண்மையைக் கடவுளெனக் கருதியவர் பரம்பொருளைக் காணலே வாழ்க்கையின் உன்னதமெனக் கருதியவர். இவ்வுண்மையை உணரும் வழியாக கல்வியைக் கண்டார். குலம். கோத்திரம், நிறபேதம் வகுப்பு வாதம் என்பவற்றைக் கருதாது கல்வி மூலம் நற்குடிமக்களை உருவாக்குவதே காந்தியின் குறிக்கோளெனலாம்.

இவ்வாறான காந்தியடிகளின் கல்விக் கருத்துக்கள் இரண்டு வகையில் அவதானிக்கக்கூடியதாகும். காந்தி கல்வித்தத்துவ ஞானியாக பெறும் முக்கியத்துவமும் தேசியத் தலைவராக அவர் பெறும் முக்கியத்துவமுமாகும்.

இவரது கல்விக்கருத்துக்கள் சமயக்கல்வி தாய்மொழிக்கல்வி, தொடர்ச்சியான கல்வி, மனித வளத்தை விருத்தி செய்வதற்கான கல்வி என வரையறுத்துக் கூறியுள்ளார். தத்துவத்தின் செயற்பாட்டம்சம் கல்வி அதன் நோக்கத்தை ஒரு மலையுச்சிக்கு ஒப்பிடலாம். மலையுச்சியிலிருந்து பார்த்தாலே நிலந் தொடர்பான தெளிவு பெறலாமென காந்தி மகானின் ஆழ்ந்த கல்வியின் நோக்கங்கள் பல அமைந்துள்ளன.

அறிவுடன் தோளோடு தோன்றி நிற்கும் ஆன்மீகப் பண்புகளை வளர்ப்பது தொடர்பாக இவர் காட்டும் கருத்து மிக முக்கியமானது நற்பண்புடைய, முழுமையான, தனியாளைத் தோற்றுவிக்கக்கூடியளவிற்கு கல்வி வலிமையுடையதாயிருப்பின் கருணைமிக்க, நற்பண்புடைய, சமாதானமான அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட சமூகத்தைத் தோற்றுவிப்பது கடினமானதாக இருக்க முடியாதெனலாம்.

மேலும் தேசிய ரீதியில் காணப்படுகின்ற அடிமைத்தனமான மன நிலையிலிருந்து நாட்டு மக்களை மீட்பதற்காகத் தாய்மொழியின் மூலம் கல்வி புகட்ட வேண்டுமெனக் காந்தி கூறினார். இக்கருத்தை ஏனைய தத்துவ ஞானிகளாலும் பவ்லோ, பிரேரே அடம் கர்ஸ் போன்ற கல்வியியலாளர்களாலும் வெளிக் கொணரப்படுகின்றன.

தாய்மொழி மூலமாகக் கல்வி புகட்டுவதன் மூலம் (தன்வளக்கத்தை) சுயவிளக்கத்தையேற்படுத்தி சுய ஆற்றலை வளர்த்துக் கொண்டு மீள முடியுமெனக் கூறப்படுகிறது. மேலும் ஆசிரியர் கருணை, அன்பு போன்ற நற் பண்புகள் நிரம்பப் பெற்றவராய் அவரது மதிநுட்ப ஆற்றல்களும் ஆன்மீகப் பண்புகளும் பிள்ளைகளிடத்தே ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதற்குத் துணையாக அமைதல் வேண்டுமென்பதும் மகானின் கருத்தாகும்.

தொடர்ச்சியான கல்வி பற்றிக் கூறும் போது குழந்தை தாய்வயிற்றில் கருத்தரித்தது முதல் இறக்கும் வரை கல்வி பெற வேண்டுமென காந்தி கூறுகிறார். இதனை நவீன கல்வியும் கூறுகிறது.

இவ்வாறே மனித வளத்தை விருத்திசெய்ய கல்வி அவசியமெனக் காந்தி கூறுவது அடிமை நிலையிலிருந்தும் மக்களை தலை நிமிரச் செய்து அசகாயச் சூரர்களாக மாற்றுவதற்கான வழி மனித வளத்தை அபிவிருத்தி செய்வதாகும். இதனை வெற்றிகரமாக்கும் பொறுப்பை முறைசார் பாடசாலைகளுக்கும், கருத்தரங்கு, கலந்துரையாடல், வானொலி புதினத்தாள், சஞ்சிகைகள் எனுஞ் சாதனங்கள் மூலம் நிறைவு செய்ய முயற்சித்தல் வேண்டுமென்றார்.

எனவே கிராமிய சமுதாயமொன்றுக்குச் சேவையாற்றுவதற்கு இளஞ் சமுதாயமொன்றினைத் தோற்றுவிப்பதே கல்வியின் இலட்சியமாகும். மனிதத்தன்மையுடைய நற்பண்புடைய இளஞ் சமுதாயத்தினரை தோற்றுவிப்பதற்காக மகாத்மா காந்தியினால் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விக் கருமத் தொடர் மிகப் பயனுடையதாகும். எனவே மகாத்மா காந்தி மிக உயர்வான ஒரு மக்கள் தலைவராகவும் விளங்கினார். இவரது கல்விச் சிந்தனைகள் மனிதத்தன்மையுடைய அகிம்சை வழிச் சமூகத்தைத் தோற்றுவிப்பதற்கு மிக மிக அவசியமானவையாகுமெனலாம்.

# ஒழுக்கம் உயர்வு தரும்

ஆக்கம்: தனுஜா ஜெயராஜா
ஆண்டு - 9 எச்.

''ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பது திருவள்ளுவர் கூற்று. இதன் கருத்தாவது நல்லொழுக்கம் எவர்க்கும் சிறப்பைத் தருவதானால், அந்த ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகக் கருதிக் காத்துப் பேணப்படும் என்பதாகும். இக்கருத்தை மனிதனை ஆக்குவது நல்லொழுக்கமே (Manners maketha man) என்ற ஆங்கிலப் பழமொழியும் உறுதிப்படுத்துகிறது.

ஒழுக்கம் என்பது நீதிநூல்களில் கூறப்பட்டுள்ள விதிகளின் படியும் இறைநூல்களின் விதிமுறைகளின் படியும் ஒழுகுவதாகும். அது ஆசாரம், சீலம், நடத்தை போன்ற பல சொற்களால் குறிக்கப்படும். ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை சற்பதற்கு என்ன அவசியம் உண்டு என்ற கேள்வி ஒருவருக்கு இயல்பாக எழலாம்.

ஒழுக்கம் பற்றி உலக ஆசிரியர்களின் உபதேசம் என்ன? தங்கள் அறிவின் உச்சநிலையிலிருந்து, அவர்கள் ''மனிதனே அமைதித் தாகம் கொண்ட உனது ஆசையையும், ஆவலையும், உனக்காகவும், பிறருக்காகவும் நிறைவேற்றவேண்டுமாயின் உன்னுள் வசிக்கும் பிரபஞ்ச சக்தியின் கட்டளைக்கேற்ப உன் வாழ்வின் ஒழுக்கத்தைத் திருத்தியமை'' என்று கூறுகின்றது.

நல்லொழுக்கம் சந்தோஷமான சமூக வாழ்வுக்கு பட்டுமல்லாது நிம்மதியான ஆத்மீக ஈடேற்றத்திற்கும் இன்றியமையாது. நல்லொழுக்கம் நற்குணத்தின் பிரதிபலிப்பே உடல் எனும் பெரும் இராச்சியத்தை ஆளும் பேரரசன் நெஞ்சமே மனத்தூய்மை ஒருவனுக்கு நல்லொழுக்கத்தையும், மனதிலுள்ள மாசு அவனுக்கு துர்க்குணத்தையும் தரும் மனச்சீர்மை பற்றிய திருவள்ளுவரின் கருத்தாவது.

''மனத்தின் கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நீற பிற'' (குறள் 34)

மனதிலே மாசற்று இருந்தாலே அனைத்து அறச்செயலுக்கும் மிகவும் முதன்மையாகும். மற்றவைகள் ஆரவாரங்கள் மட்டுமே, அவை அறச்செயல்கள் ஆகா இத்தகைய நல்லொழுக்கம் மனிதனுக்கு சிறு வயதிலிருந்தே புகட்டப்படுதல் வேண்டும். வீட்டுச்சூழல் நன்றாக அமைவது, பெற்றோர் முன்மாதிரியாக நடப்பது ஒரு குழந்தையை நல்லொழுக்கம் உள்ளவனாக்குவதற்கு மிக அவசியமாகும். இதனைக் குறித்து வழக்கில் ஒரு கதை உண்டு. சிறு வயதில் குண்டூசி திருடும் பழக்கமுடைய மகனை அவன் திருடிய ஒவ்வொரு சமயமும் முத்தமிட்ட தாயையும், அவன் வளர்ந்து பெருந்திருடனாகி சிறையில் இருந்த போது தனது இந்நிலைக்குத் தாயே காரணம் என்பதை உணர்ந்து சிறைக்கு அவனைப் பார்க்க வந்த தாயை முத்தமிடுவது போலச் சென்று மூக்கைக் கடித்ததையும் நாம் யாவரும் அறிவோம்.

''சூரஞர் மூழ்கியும் ஆக்கம் இழந்து
வாரி சுருக்கியும் வான்மை நிறுத்திக்
தாரணி ஆள் அரிச்சந்திரன்''

என்ற கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் உருகிக் கண்ணீர் வடிக்கின்றார். ''சுதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேன்'' என்ற அரிச்சந்திரனின் கூற்று அவனது வாய்மை தவறா ஒழுக்கத்தை எடுத்துக்காட்டுகிறது. அதுவே சத்தியத்துக்கு அரிச்சந்திரன் என்ற அழியாப் புகழ் நாமத்தையும் பெற்றுக்கொடுத்தது.

ஒரு பெண்ணிடமுள்ள நல்லொழுக்கம் அவளது உயர்ந்த குடிப்பிறப்பை எடுத்துக் காட்டும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நாற்குணங்கள் பெண்ணின் மகத்துவத்தைப் பிரதிபலிக்கும். எந்த ஆணுக்குப் பின்னாலும் ஒரு பெண்ணே இருக்கிறாள். அப்பெண்ணின் ஒழுக்கம் அவனது வாழ்வைத் தீர்மானிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்தது.

நாணமில்லா மங்கையர் உப்பில்லா சோறு போன்றவர்களாவர் என்ற அப்துல் மஜீதுப் புலவரின் கூற்றிலிருந்து அப்பெண்ணுக்கு ஒழுக்கம் எவ்வளவு அவசியமாகிறது என்பது நன்கு தெளிவாகிறது. அவள் எவ்வளவு கல்வியறிவுள்ள மேகத்தைப் போன்றவளாவாள். மனிதனின் ஒவ்வோர் அசைவிற்கும் நெறிகளுள்ளன. யுத்தம் செய்வதற்குக் கூட யுத்ததர்மம் எனும் நெறி உண்டு. எல்லா நெறிகளிலும் கட்டுப்பாடுகளிலும் ''ஒழுக்கம்'' என்ற உயர்ந்த பண்பாடே அதில் உன்னதமான இடத்தை வகிக்கின்றது எனலாம். இதனைத்தான் திருவள்ளுவரும்

''ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்
பத்து வேண்டும் பனுவல் திணிவு''

என்று திருக்குறளிலேயே கூறியுள்ளார். ஒருவன் செய்யும் பாவங்கள் அவனது தீய ஒழுக்கங்கள் தனக்கும் சமுதாயத்துக்கும் ஆத்மீக ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும், பாவங்களை ஏற்படுத்துவதால் இவற்றைத் தவிர்த்துக் கொள்ள முயற்சிப்பது ஒவ்வொருவரது கடமையாகும்.

# அடக்கம் (அடக்கத்தை கடைப்பிடியுங்கள் அமைதி கிடைக்கும்)

ஆக்கம்: எஸ். ஜெயலோஜினி
ஆண்டு - 8 வி.

''அடக்கம் அமரருள் உய்க்கும் அடக்காமை
ஆர் இருள் உய்த்து விடும்''

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். மனிதனது நற்குணங்களில் நனி சிறந்து விளங்குகின்றது. அடக்கம், கல்வி, செல்வம் குலம். பட்டம், பதவி முதலியவை அனைத்தும் இருந்தும் அடக்கம் என்ற ஒன்றில்லையானால் அவள் சிறப்படையாள். இதற்கு மாறாக அவையனைத்தும் இல்லாமல் அடக்கத்தினை மாத்திரம் ஒருவன் கொண்டிருந்தும் அவள் அனைத்தும் உடையவளாகவே கருதப் படுவாள்.

அதனை விளக்க வேண்டும் என்பதற்காகவே எமது ஆன்றோர் பல உவமைகளைக் கூறியுள்ளனர். ஒரு குழம்பில் மிளகு, காரம் ஆகியவை அனைத்தும் இருந்தும் உப்பு என்ற ஒன்றில்லையானால் அவை உண்பதற்கு உகந்ததாய் இராது. இது போன்றுதான் அடக்கம் வாழ்க்கைக்கு இன்றி அமையாதது. உதாரணமாக அருச்சுணன், தர்மன், கர்ணன் போன்றோரை குறிப்பிடலாம். அவர்கள் செய்த அற்புதங்கள் அதாவது அடக்கம், நேர்மை, மன்னிப்பு, வாக்கு, உறுதி என்று பல உள்ளன. இதற்கெல்லாம் அடக்கமே காரணமாக அமைகின்றது. இதே போன்று அடக்கம் யாரிடத்தில் உள்ளதோ அவர் என்றும் தன் வாழ்வை நிம்மதியாகக் நடத்துவர்

ஆற்றின் அடக்கம் பெரின். அடக்கம் எங்கு பயன்படுத்தப்படுகின்றது. எங்கே பயன் படுத்தப்பட வேண்டும் என்று மதம், வீடு, பாடசாலை, இடமாற்றம் போன்று பல் வேறானவற்றை கூறலாம். முதல் மதத்தை எடுத்துக்கொண்டால் நான் மதங்களிலும் அடக்கத்தை கடைப்பிடியுங்கள் என்று கூறப் படுகின்றன. இரண்டாவதாக வீடை எடுத்துக் கொண்டால் வீட்டில் அடக்கத்தை கடைப்பிடிப்பது மிகவும் நன்று. அதே போன்றுதான் பாடசாலை. பாடசாலையில் அடக்கத்தை கடைப்பிடித்தால் கல்வியில் உயரலாம். மற்றது இடமாற்றம். நாம் வீட்டில் எப்பொழுதும் அடைத்து இடப்படுபவர்கள் அல்ல. நாடோடிகளாகவும் இருக்கலாம். இதனை மனதிற்கொண்டு அடக்கத்தைக் கடைப்பிடிக்கலாம்

---

தாய் வேண்டுமென்றே மறைந்திருக்கிறாள் அப்பொழுது குழந்தை ஏக்கம் பிடித்தவனாக இங்குமெங்கும் பதறி அழுது கொண்டு தாயைத் தேடுகிறான், அவனுடைய பரிதாபகரமான நிலையைப் பார்த்துக் தாய்க்கு இரக்கம் வருகிறது. ஈசனுடைய கிருபையும் அத்தகையது.

ஸ்ரீ இராமகிருஷ்ணர்

---

கோபத்தினால் பிறரைத் திருத்துவதை விட அன்பினால் திருத்தி விடலாம் மரத்தை வெட்டித் தள்ளி பழத்தைப் பறிப்பதை விட உலுக்கியே பழத்தைப் பறிக்கலாம். உள்ளத்தில் கோபமாகிய புகை இருந்தால் முக்கியமாக கண்ணாடி விகாரமடையும் பொறுமை சாலியின் முகம் மின்சார விளக்கைப் போல் எப்போதும் அழகாகவேயிருக்கும் கோபிற்டர்கள் தாங்களும் சிரிக்க மாட்டார்கள் பிறர் சிரிப்பதைக் கண்டாலும் கோபமடைவார்கள்.

— ஸ்ரீ கிருஷ்ண பிரேமி —

# ஓசோன் படையும் பாதிப்பும்

தொகுப்பு: தியாகராஜா லோகேஷினி
ஆண்டு - 11 சீ

புவியை சூழக் காணப்படும் ஒரு வாயு மண்டலமே ஓசோன் படலமாகும். இது புவிக்கு மேல் காணப்படும். மாறன் மண்டலத்திற்கும் படை மண்டலத்திற்குமிடையே ஓர் எல்லையாக அமைந்துள்ளது. இப்படையானது புவியின் வெப்பநிலையைச் சம அளவில் பேணுவதற்கு உதவுகிறது. அதாவது சூரியனிலிருந்து புவியை நோக்கி வரும் கதிர்களைத் தடுத்து புவிக்குத் தேவையான நன்மை விளைவிக்கக் கூடிய கதிர்களை மாத்திரம் உள்ளே விடுகிறது. அத்தோடு இரவு வேளை புவியிலிருந்து வெளியேறும் வெப்ப நிலையானது வான் வெளிக்குச் சென்று விடாமலும் இவ்வாயு மண்டலம் செயலாற்றுகிறது. இச் செயற்பாடு உவப்பற்ற கால நிலைப் பிரதேசங்களில் தாவரங்களை வளர்க்கப் பயன்படுத்தப் படும் பச்சை வீடு Green house எனும் செயற் பாட்டை ஒத்திருப்பதால் ஓசோன் படையினால் மேற்கொள்ளப் படும் புவியின் வெப்பநிலையைப் பாதுகாக்கும் செயற்பாடு பச்சை வீட்டு விளைவு (Green houseeffect) எனப்படுகிறது.

தற்போது மனிதனால் கைக் கொள்ளப் பட்டு வரும் சில நடவடிக்கை காரணமாக ஓசோன் படையில் பாதிப்பு ஏற்படுகிறது. இதனை ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள துவாரம் எனக் குறிப்பிடுகின்றனர்.

அந்தாட்டிக்கா கண்டத்தில் 1979ம் ஆண்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளச் சென்ற விஞ்ஞானிகள் கலிவே (Halley Bey) எனும் இடத்தில் ஓசோன் படையின் துவாரத்தை முதன் முதலாகக் கண்டுபிடித்தனர். 1984ம் ஆண்டில் இவ்விடத்தில் மீண்டும் ஆராட்சியை மேற்கொண்ட போது துவாரத்தின் அளவு 30 சத வீதம் அதிகரித்துக் காணப்பட்டதாகவும், தற்போது அந்தாட்டிக்காக கண்டத்தை விட அவுஸ்திரேலியா, நியூசிலாந்து தென் அமெரிக்கா முதலான பிரதேசங்களிலும் ஓசோன் படையின் துவாரம் ஏற்பட்டுள்ளதைக் கண்டறியப்பட்டுள்ளது.

இத்துவாரம் ஏற்படப் பிரதான காரணியாக அமைவது குளோரோ புளோரோ காபன் (CFC) எனும் இரசாயன வாயுவாகும். இது குளிரூட்டியைக் குளிரேற்றுவதற்காகப் பயன்படுத்தப் படுகிறது. உலகின் ஒவ்வொரு வருடமும் 700 தொன் CFC வாயு வளிமண்டலத்தில் சேர்க்கப்படுகிறது. இவ்வாயுப்படையும், ஓசோன் படையுடன் கலந்து அதை சிதைவடையச் செய்கிறது. CFC தவிர வளிமண்டலத்திற்கு ஏவப்படும் ரொக்கற்றுக்கள் செய்மதிகள் ஆகியவற்றால் வெளிவிடப்படும் புகையும் நிலத்துக்குப் பயன்படுத்தப்படும் வளமாக்கிகளும் கிருமிநாசினிகளும் மற்றும் வாகனங்களால் வெளிவிடப்படும் புகையும் ஓசோன் படையைப் பாதிக்கிறது.

இவ் ஓசோன் படையில் ஏற்படும் பாதிப்பால் பூமி பாரதூரமாக சூழல்ப்பிரச்சினையை எதிர் நோக்க வேண்டி ஏற்படும். குறிப்பாக புவியின் வெப்பநிலை உயர்வடைந்து அது உலக மக்களைப் பாதிப்பதுடன் முனைவுப் பிரதேசங்களில் காணப்படும் பனிக்கட்டிக்கவிப்புக்களையும் உருகச் செய்யும். இதனால் கடலில் நீர் மட்டம் உயர்வடைந்து ஏராளமான தீவுகள் மூழ்க வேண்டிய அபாயம் தோன்றும் இதே போன்று மனித தீங்கை ஏற்படுத்தும் புற ஊதா கதிர்கள் (Ultravioletrays) நேரடியாகப் புவியை வந்தடைவதால் மனிதர்கட்கு தோல் தொடர்பான நோய்களும் மற்றும் தலை வலி கண் சம்பந்தமான பாதிப்புக்கள் என்பனவும் நிகழலாம்.

எனவே ஓசோன் படையில் நிகழ்கின்ற இத்தகைய பாதிப்பினைக் தடுக்காவிடின் எதிர்காலத்தில் புவியானது பாரதூரமாகப் பாதிப்படையலாம். இந் நிலையினைப் பாதுகாப்பதற்கு வெவ்வேறு நடவடிக்கைகளைக் கைக்கொண்டு வருகின்றன.

## விநாயகர் ஸ்டோர்

உங்கள் இல்லங்களுக்குத் தேவையான

மளிகைப் பொருட்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாய விலையில்

பெற்றுக்கொள்ள

என்றுமே நாடுவீர்

## விநாயகர் ஸ்டோர்

பிரதான வீதி, வாழைச்சேனை.

---

வாழைச்சேனை, பிரதான வீதியில்

திருமகள் ஸ்டோர்

உங்களுக்குத் தேவையான

மளிகைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்

சகாய விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

## திருமகள் ஸ்டோர்

பிரதான வீதி, வாழைச்சேனை.

சிங்கர் தயாரிப்புக்களான

தொலைக்காட்சிப் பெட்டிகள்

தையல் மெசின்கள்,

குளிர்சாதனப் பெட்டிகள்,

மின்சாரப் பொருட்கள்,

பாடசாலை உபகரணங்கள்

ஆகியவற்றைச் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**T. L. T. & BROS**

பள்ளிவாசல் வீதி,
வாழைச்சேனை.
டெலிபோன்:- 065 - 57245

---

சகல விதமான வைபவங்களுக்கும்

தேவையான பரிசுப் பொருட்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும்

சகாய விலையில் பெற்றுக்கொள்ள

நாட வேண்டிய இடம்

**பிள்ளையார் ஸ்டோர்**

பிரதான வீதி,
வாழைச்சேனை.

# மாண்புறும் மாணவர் நாமே

ஆக்கம்: இராசநாயகம் காண்டீபன்
ஆண்டு - 13 வர்த்தகம்

காலை நேரத்து கானக்குயில்
வண்ணக் கவிதை பாட
கருங் காகங்கள் எல்லாம்
கானத்தே கரைந்து ஓட
மேகத்து வானத்து இடுக்கினில்
வட்டப் பருதி அரங்கேற
பச்சைப் பசேல் தளிர்களினூடு
கூசிக் கொண்டு ஒளிக்கதிர் ஊசலாட
இலையோர பனித்துளிகள் - இளம்
தென்றல் பட்டு நாணத்தால் ஒடுங்க
மொட்ட விழ்ந்த வண்ணமலர் மீது
பொன் வண்டு இனங்கள்
ரீங்காரத்துடன் ஆனந்தக் கூத்தாட
அந்த இளவேனில் காலைப் பொழுதில்
பட்டாம் பூச்சியாய் படபடத்து
வெள்ளைப் பட்டாடை உடுத்து
சிட்டாய் சிகளமாய் இறகடித்து
பாதை ஓரத்து பவனி வரும்
மாணவர் பாலகர் மீதிலே
பொன் ஒளிக்கதிர்கள் உரச
தங்க விக்கிரகமாய் தளதளத்து
வீதித் தரையினில் உலாவ
தேவலோகத்து சிறார்களென
பலரும் பல தோரணையில் ஆர்ப்பரிக்கும்
தூரத்து விடிவெள்ளிக் காய்
துவளாமல் தினம் செல்லும்
நாளைய மாய இருள் அகற்றும்
பாடசாலை மாண்புறும் மாணவர் நாமே

## வேண்டியவை மூன்று

— கோமளா —
ஆண்டு - 8 வீ

01. இருக்க வேண்டியவை மூன்று — தூய்மை, நேர்மை, நீதி
02. ஆள வேண்டிய மூன்று — நாக்கு, நடத்தை, கோபம்
03. பெற வேண்டிய மூன்று — அன்பு, தைரியம், மென்மை
04. அடைய வேண்டிய மூன்று — மகிழ்ச்சி, சுத்தம், முயற்சி
05. பிரித்துரைக்க வேண்டிய மூன்று — சிக்கனம், ஊக்கம், நாணயம்
06. நேசிக்க வேண்டிய மூன்று — அறிவு, கற்பு, மாசின்மை

# பெற்றோர்

ஆக்கம்: லோ. கேசவன்
ஆண்டு - 12 வர்த்தகம்

சிரமத்தின் மத்தியிலே - எம்மை
சிசுவாக்க மண்ணினிலே
இறைவனைத் தினம் வேண்டி - தாய்
இனிதாகப் பெற்றெடுப்பாள்

அன்புடன் அரவணைத்து - எமது
அழகிய முகம் துடைத்து
தாலியை தினம் தொழுது - இனிய
தாலாட்டுப் பாடிடுவாள்

தவழுகின்ற வயதுவர - எம்மை
தரையினிலே தவழவிட்டு
உயிரினை கையில் கொண்டு - உள
மகிழ்வோடு பார்த்திடுவாள்

நோய் எம்மை தொடும்போது - ஒரு
நொடிப்பொழுதும் உறங்காமல்
கண்ணை இமை காப்பதுபோல் - தாய்
கனிவுடன் கண் விழிப்பாள்

பெண் எனும் பாலுக்குத் - தாய்
பெருமைதனை கொடுத்திடுவாள்
இரக்கமெனும் சொல்லுக்கு - தாய்
இறைவனையே வென்றிடுவாள்

மூவிரண்டு வயதுவர - எம்மை
முகம் மலர்ந்து நோக்கிடுவார்
அறிவுதனை ஊட்டிடுவார் - அப்பா
ஆசானை அறிமுகப்படுத்திடுவார்

காலங்கள் ஓடிடவே - நாம்
கல்வியில் சிறந்திடவே
சிரமங்கள் பலபட்டு - அவர்
சிரத்தையுடன் வளர்த்திடுவார்

கண்டித்து வளர்த்திடுவார் - எம்மை
கரைதனில் சேர்த்திடுவார்
ஆண் எனும் குலத்திற்கு - அப்பா
அகரமாய் விளங்கிடுவார்

---

# உங்களுக்குத் தெரியுமா?

பிரியதர்சினி
ஆண்டு - 8 வீ

| | |
|---|---|
| பாடுமீன்கள் | மட்டக்களப்பு |
| பெரிய நீர்த்தேக்கம் | கல்லோயா |
| குகை ஓவியம் | தம்புல்ல |
| யானைகள் அதிகம் காணப்படுவது | தங்காலை |
| தேயிலை ஆராய்ச்சி நிலையம் | தலவாக்கொல்லை |
| வானிலை ஆராய்ச்சி நிலையம் | திருகோணமலை, கொழும்பு |
| சீனித்தொழிற்சாலை | கந்தளாய் |
| உருக்கு தொழிற்சாலை | ஒருவெல |

# சிறுவர் உரிமைகள்

தொகுப்பு C. சந்திரவதனி
ஆண்டு - 13 கலை

ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் பிரகடனம் 1948 டிசம்பர் 10ம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. எனினும் குழந்தைகளின் உரிமைகள் விரிவான வகையில் 1959 நவம்பர் 20ம் திகதியே ஏற்பட்டது.

## சிறுவர் உரிமைகளின் பத்து அம்சங்கள்

1. சாதி, நிறம், பால், மதம், தேசம் என்ற வேறுபாடுகளின்றிக் குழந்தைகளின் உரிமைகள் வழங்கப்படல் வேண்டும்.
2. சுதந்திரத்துடனும், சுயகௌரவத்துடனும், சுகமாகவும் அவர்கள் வாழக்கூடிய பாதுகாப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.
3. அவர்களுக்கான ஒரு பெயரும், விழாவும் கொண்டாடக் கூடியதாய் இருக்க வேண்டும்.
4. சமூகப்பாதுகாப்பு, சத்துணவு, வீடமைப்பு, விளையாட்டுக்கள், மருத்துவ சேவைகள் ஆகியன வழங்கப்படல் வேண்டும்.
5. வலது குறைந்தோருக்கு விசேட பராமரிப்பும் கல்வியும் வழங்கப்படல் வேண்டும்.
6. பெற்றோர்கள் இயன்றவழிகளிலெல்லாம் தமது குழந்தைகளுக்குப் பொறுப்பாயிருந்து அவர்களைப் பராமரித்து அவர்களுக்கு வேண்டிய அன்பையும், பாதுகாப்பையும் வழங்கல் வேண்டும்.
7. குழந்தைகளுக்கு இலவசக்கல்வி, களியாட்டு வசதிகள் வழங்கி அவரவர்தனித்திறமைகளை அபிவிருத்தி செய்ய சமசந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்
8. திடீர் அதிர்வூட்டும் பேரிடி போன்ற சந்தர்ப்பங்களில் உடனடிப்பாதுகாப்பும், நிவாரணமும் வழங்கப்படல் வேண்டும்.
9. எல்லாவித கொடூரங்கள், பழிவாங்கல்கள், அலட்சியங்களிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டும்.
10. எவ்வித குறுக்கீடுகளுமின்றி அவர்கள் பாதுகாக்கப்பட்டு அவர்கள் மனங்களில் சமாதானம் ஊட்டப்பட வேண்டும்.

உலக சிறுவர் ஆண்டாக 1979 பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் அக்டோபர் 1ம் திகதி உலக சிறுவர் அதனை அங்கிகரித்துள்ளன.

# நோயற்ற வாழ்வும் விவசாயமும்

ஆக்கம்: திருமதி. க. கணேசன்
விவசாய ஆசிரியர்

நாட்டில் இன்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பலவித நோய்களில் இருந்தும் எம்மைப் பாதுகாப்பது எமது ஒவ்வொருவரதும் முக்கிய கடமையாகும். அத்துடன் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

அன்று விவசாயி வியர்வை நிலத்தில் சிந்த அயராது பாடுபட்டு உழைத்து கண்ட பயன் நோயின்றிய வாழ்க்கை ஆகும். இன்று தொழில் நுட்பம் அதிகரித்து வியர்வை சிந்தாத உழைப்பில் ஈடுபடும்போது நோய்க்கு ஆளாகி வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாது அல்லலுறும் நிலை காணப்படுகிறது.

இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு வீட்டுதோட்டம் நிவாரணி ஆகும். கிராமப்புற வாசிகளென்றாலும் நகர்ப்புற வாசிகளென்றாலும் வீட்டு தேவையை பூர்த்தி செய்ய நல்லதொரு தோட்டம் மிக உதவியாக இருக்கும்.

வீட்டில் தரிசாக இருக்கும் நிலத்தையும் கிடைக்க கூடிய கழிவுப் பொருட்களையும் பிரயோசனப்படுத்தவும் ஓய்வுநேரம் வீணாகாது நல்ல முறையில் செலவழியவும் இது வழி வகுக்கும்.

வீட்டுத்தோட்ட செய்கை மேற்கொள்ளும் போது குடும்பத்தை நடாத்தும் நாளாந்த செலவு குறைக்கப்படுவதுடன் வருவாயும் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் உயரவும் வழியுண்டு. நோயற்ற வாழ்வும் கிடைக்கும்.

நோயின்றி வாழ வீட்டுத்தோட்டம் எவ்வகையில் உதவுகிறதென் அவதானித்தால் ஒரு குடும்பத்துக்கு தேவையான நிறையுணவை வழங்குகிறது. சமச்சீரான உணவு முக்கியமாக புரததேவை பூர்த்தி செய்யப்படுகிறது. கனிப்பொருட்களும் உயிர்சத்துக்களும் கிடைக்கின்றன. நோயற்ற பழுதடையாத புதிய மரக்கறி, பழங்கள், இலைகறிகள் கிடைக்க உதவுகிறது. அத்துடன் பூச்சி, பூஞ்சண நாசினிகள் விசிறப்படாத மரக்கறி வகைகளும் கிடைக்கும். இதனால் உடல்நலம் குன்றுவதைத் தடுக்க முடியும்.

சிறந்த ஒரு பொழுதுபோக்கும் உடற்பயிற்சியுமாகும். சுற்றாடலை சுத்தமாகவும் சுகாதாரத்திற்கு ஏற்றதாகவும் வைத்திருக்க ஏதுவாகிறது. உடலை வருத்தி உழைப்பதால் மேலதிக வெல்லம் எரிக்கப்பட்டு நீரழிவு போன்ற நோய்கள் ஏற்படுதல் தவிர்க்கப்படும். தற்போது ஆட்கொல்லி நோய்களில் ஒன்றாக பயங்கர நோய்களிலிருந்து பாதுகாத்து உடல் நலத்துடனும் உளத்திருப்தியுடனும் வாழ வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை பயனுறும் என்பது திண்ணம்.

1. ''சுழன்று ஏர் பின்னர் உலகம் அதனால் உழந்து உழவேதலை''

2. All People that live are one in Circumstance of birth, Diversities of works give each their Special worth.

# ஒரு தெரேசாவாக ஒரு டயானாவாக

ஆக்கம்: அருட்சகோதரி. மேரி. சிறியபுஸ்பம்
பிரதி அதிபர்
வாழைச்சேனை இந்துக்கல்லூரி

அண்மையில் முழு உலகையுமே துயரக்கடலில் ஆழ்த்திய இவ்விருவரின் மறைவும் இன்னும் மக்கள் மனதிலிருந்து நீங்கவில்லை என்பதற்கு அவர்களைப் பற்றி சமூகத்தொடர்புச் சாதனங்கள் அடிக்கடி வெளியிடும் செய்திகளே சான்று. அவர்கள் இருவரும் இரு துருவங்கள். அன்னை தெரேசா முற்றும் துறந்து இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்த ஒரு துறவி. டயானாவோ எல்லா ஆடம்பரங்களும், செல்வங்களுக்கும் உரித்தான அரண்மனைப் பெண். முழு உலகையுமே தம்மால் ஈர்க்கும் அளவிற்கு அவர்களிடம் இருந்தது என்ன? இவ்விருவரும் வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும், அவர்களிடம் பொதுவான ஒரு பண்பு இருந்தது. அதுதான் சமுதாயத்தின் கீழ் நிலையில் உள்ளவர்களின் மேல் அவர்கள் கொண்ட ஆழ்ந்த அன்பு, பரிவு, மனித நேயம், காருண்யம் என்பனவாம்.

''உன்னைப்போல் உன் பிறரையும் நேசி'' என்ற யேசு பிரானைத் தம் தலைவனாகக் கொண்ட இவர்கள் இருவரும் அந்த யேசு யாருடன் தன்னை அடையாளப் படுத்தினாரோ, அவர்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்கள். ''நான் பசியாய், தாகமாய், இருந்தேன். எனக்கு உண்ண, குடிக்கக் கொடுத்தீர்கள். ஆடையின்றி இருந்தேன் என்னை உடுத்தினீர்கள். நோய்வாய்ப்பட்டும், சிறையிலும் இருந்தேன். என்னைப் பார்க்க வந்தீர்கள். அந்நியனாய் இருந்தேன். என்னை உங்கள் வீட்டில் வரவேற்றீர்கள்'' என்று மேற்கூறப் பட்டவர்களுக்குச் செய்பவை எல்லாம் தனக்கே செய்வதாகத் தன்னை இத்தகையோரோடு அடையாளப்படுத்துகிறார்.

அன்னை தெரேசா, ஏழை எளியவர்கள், அனாதைகள், நோயாளிகள், வழியோரம் வாழ்பவர்கள், கைவிடப்பட்டவர்கள், வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்று உணர்ந்து அவர்களின் மனித மாண்பை பேணிக்காக்க அரும்பாடுபட்டார். ஒரு சில மணிநேரத்தில் இறக்கும் தறுவாயில் வீதியோரம் கிடந்தவர்கள் மனித மாண்புடன் சாக வேண்டும் என்று எண்ணி தன் இல்லத்தினுள் கொண்டு வந்தார். அவருடைய முகத்தில் காணப்பட்ட சுருக்கங்கள் அவர் சேவை செய்த மக்களின் வேதனையின் பிரதிபலிப்பே என்று கூறப்படுகிறது. இளவரசி டயானாவும் இத்தகையவர்கள் மேல் கருணை கொண்டிருந்தார் என்பதற்கு அவர் சேர்ந்து பணிபுரிந்த எண்ணற்ற தர்ம ஸ்தாபனங்களே சான்று. புற்றுநோயால் துன்புற்றவர்கள், துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவர்கள், எயிட்ஸ் நோயாளிகள், நிலக் கண்ணிவெடியினால் அவயவங்களை இழந்தவர்கள் இவர்கள் மேல் தன் அளவற்ற இரக்கத்தைப் பொழிந்தார். தன் அரச நிலையிலிருந்து இறங்கி வந்து அவர்களின் வேதனையில் ஒன்றித்தார்.

மனித நேயம் மனிதனை இறைவனுக்குப் பிரியமானவனாக்குகிறது. ''அபு பென ஆதாம்'' என்றொரு ஆங்கிலக் கவிதையின் முக்கிய கதாபாத்திரமாக வரும். அபு ஒரு காட்சி காணுகிறார். வானதூதர் ஒருவர் அவரின் அறையில் வந்து ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். திடீரென விழித்தெழுந்த அபு ''என்ன எழுதுகிறீர்? எனக் கேட்க ''இறைவனை அன்பு செய்பவர்களின் பெயர்கள்'' என்று தூதர் பதிலளிக்கிறார். அபு ஆவலுடன் அதில் எனது பெயரும் ஒன்றா? ''என்று கேட்க ''இல்லை'' என்று தூதர் பதிலளிக்கிறார். அபுவுக்கு கவலை வந்து விட்டது. ''அப்படியானால் தன் சக மனிதரை அன்பு செய்பவர் என்று என் பெயரை எழுதும்'' என்று பணிவுடன் வேண்டிக்கொள்ள தூதர் எழுதிவிட்டு

மறைந்து விட்டார். மறுநாள் தூதர் அபுவுக்குத் தோன்றி பெயர்ப் பட்டியல் ஒன்றைக் காட்டினார். 'இறைவன் அன்பு செய்யும்' மக்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் அது. அபுவின் பெயர் எங்கு இருந்தது தெரியுமா? எல்லாவற்றிற்கும் முதலாக ஆம், இறைவனுக்கு நாம் காட்டும் அன்பு. பக்தி எல்லாம் மனிதனை மதிப்பதில், அன்பு செய்வதில் வெளிக்காட்டப்பட வேண்டும்.

கண்ணால் காணுகின்ற தன் உடன் பிறப்புக்களை அன்பு செய்யாமல் காணாத கடவுளை அன்பு செய்கிறேன் என்பவன் பொய்யன்.

மனிதரில் அவர்களின் துன்பத்தில், இறைவனைக் கண்ட இவ்விரு பெண்களைப் போல், நாம் வாழும் சமுதாயத்திற்கு தெரேசாக்களாக, டயானாக்களாக இருக்க நீங்களும் நானும் அழைக்கப்படுகிறோம். எம்மைச் சுற்றி எம்முடன் வாழும் ஏழை எளியவர், அகதிகள், அனாதைகள், விதவைகள், போரின் கொடுமைக்குப் பலியானவர்கள், நம்பிக்கை இழந்தோர் உடல் உள காயங்களினால் வேதனைக் கடலில் அமிழ்த்திருப்போர் இவர்களுக்கு எம் அன்பை, இரக்கத்தைக் காட்டுவோமா? அவர்களின் மனித மாண்பு உயர ஏதாவது செய்வோமா? ஒரு ஆறுதலான வார்த்தை, ஒரு புன்னகை, நம்பிக்கை அளித்தல், வேதனையில் ஒன்றித்தல், இருப்பதைப் பகிர்ந்து கொள்ளல் போன்ற செயல்கள் மூலம் மனிதரில் இறைவனைக் காண்போமா?

உலகில் உயர்ந்ததே மனிதம்
இறைமையின் சாயலே மனிதம்
அந்த மனிதம் மலர்ந்திட வேண்டும்

# மாணவர் இலக்கணம்

ஆக்கம்: திருமதி. அருள்நாயகி சுதாகரன்
(தட்டெழுத்தாளர்)
இந்துக்கல்லூரி

ஆசிரியர்களும் மாணாக்கர்களும் சில குணாநிசயங்களை உடையவர்களாயிருத்தல் அவசியம். அறிவு வளர்ச்சியில் உண்மையான ஆவேசம், விடாமுயற்சியும் தூய்மையுமே மாணாக்கனுக்குரிய இலக்கணங்களில் முக்கியமானவை. மனோவாக்குக் காயங்களில் பூரண தூய்மை இன்றியமையாததாகும். கருதிய பொருள் கை கூடும் என்ற ஆன்றோர் மொழியொன்றுண்டு. அதற்கேற்ப நமக்கும் 'கல்வி' பெறுவதில் நிறைந்த ஆர்வம் இருக்க வேண்டும். நாம் முழு மனத்துடன் விரும்பினாலொழிய ஒரு பொருளும் நமக்குக் கிடைக்காது. அதற்காக இடை விடாத முயற்சி செய்யவேண்டும். நம் மனத்திலிருக்கும் தாழ்ந்த குணங்களை ஒழிக்க ஓயாத போர் செய்ய வேண்டும். தாழ்ந்த தன்மையை அகற்றி உயர்ந்த தன்மை வெற்றி பெறும் வரை இந்தப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இவ்வித ஊக்கத்துடன் முயற்சி செய்யும் மாணாக்கன் நிட்சயமாக வெற்றி பெறுவான் என்பதில் ஐயமில்லை.

# உனக்கும் ஒரு வாழ்வு உண்டு

ஆக்கம் : த. ஜெயா
ஆண்டு - 12 வர்த்தகம்

காலைக் கதிரவன் கண் விழித்து முற்றத்தில் வந்து முத்தங்கள் கொடுக்கின்ற வேளையிலே நிவேதா பிறந்தாள் கண் திறந்தாள் அந்த வேளையில் தான் நிவேதாவின் தாய் கண்மூடினாள். அந்த நாளிலிருந்து அவளது தந்தை வளர்த்து வந்தார். அவளது தந்தையார் பல கஸ்ரங்களின் மத்தியில் அவளை வளர்த்து ஆளாக்கினார். அவளை எல்லோரும் ஒரு ராசி இல்லாதவள் என்று தூற்றிக் கொண்டனர். சிறுவயதிலே ஆர்வம் நிறைந்தவளாக பாடசாலை சென்றுகொண்டிருந்தாள். இவ்வாறு நாட்கள் வாரங்களாயின, வாரங்கள் மாதங்களாயின, மாதங்கள் வருடங்களாயின இவ்வாறு பல வருஷங்கள் உருண்டோடின. நிவேதா 13 வயதை எட்டிப் பிடித்திருந்தாள். அந்த வேளையில் தந்தை ராமு லொறி விபத்தில் மரணமானார். அவளது விதி அப்படியோ என்னமோ பிறந்தவுடன் தாய் இறந்தாள். பருவ வயதடையும் போது தந்தை இறந்து விட்டார். ஆனால் சமூகம் அவளை ஒரு ராசி இல்லாதவள் என்று தூற்றியது. அவளுக்கு ஆதரவாக இருந்த தந்தையும் இறந்த பின் அநாதையானாள். சொந்தம் பந்தம் என்று ஆயிரம் பேர் இருந்தும் அவளை ஒருவரும் சேர்த்துக் கொள்ளவில்லை. தன் தந்தையின் உடன் பிறப்பான மாதவியிடம் சென்றாள். அவளோ நீ ராசி இல்லாதவள் எங்கள் வீட்டில் யாரைத் தொலைக்கப் போகிறாய் என்று துரத்தி விட்டாள். எல்லோராலும் புறக்கணிக்கப் பட்ட போது ராமுவின நெருங்கிய நண்பனான வெங்கடேஸ் அவளை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். வெங்கடேஸ்க்கு இரு பிள்ளைச் செல்வங்கள் இருந்தன. மூத்த மகள் சீனு திருமணம் முடித்து விட்டு தன் கணவருடன் கனடா சென்று விட்டாள். மகன் அஜித் உயர்தரம் வரை படித்துவிட்டு ஜேர்மனி சென்று விட்டான். இரு பிள்ளைச் செல்வத்துடன் மூவராக நிவேதாவை வளர்த்தனர். நிவேதாவைப் பற்றிய அனைத்து விடயங்களையும் அஜித்திற்கு சொல்லியிருந்தனர்.

அஜித் அவளை தனது நண்பியாக நினைத்து அவளது படிப்பிற்கு தேவையான எல்லா செலவுகளையும் செய்து வந்தான். அவளின் தேவைகளை அஜித் நிறைவேற்றிக் கொண்டிருப்பவனாக காணப்பட்டான். அஜித்திற்கோ நிவேதா மேல் எல்லையற்ற அன்பு, நிவேதாவிற்கு அதே போல் அஜித்தின் மேல் அளவு கடந்த பாசம் இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்பை அள்ளிக் கொட்டினர். நிவேதா நன்றாகப் படித்து க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஏ/எல் படித்துக்கொண்டிருந்தாள். அஜித்தின் வெளியூர் காலம் நிறைவுறும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. தனது பெற்றோரை விட நிவேதாவைப் பார்க்க ஆவலோடு காத்துக் கொண்டிருந்தான். வெளியூர்க்காலம் நிறைவு பெற்றது. நிவேதாவும் ஏ/எல் பரீட்சை எடுத்து முடித்து விட்டு பெறுபேற்றைக் காத்துக் கொண்டிருந்தாள். பெறுபேறுகள் வெளியானது. நிவேதா பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றிருந்தாள். அஜித் இலங்கை வந்து சேர்ந்தான். அஜித்தின் வருகையை எதிர் பார்த்த வண்ணம் அஜித்தின் பெற்றோரும் நிவேதாவும் காத்துக் கொண்டிருந்தனர். நிவேதாவின் திருமணத்திற்கு தேவையான அனைத்து ஆபத்தங்களுடனும் வந்து சேர்ந்தான். பெற்றோரைக் கண்டதும் ஆவலோடு ஓடி வந்து கன்னத்தில் முத்தங்கள் மாறி மாறி கொடுத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர், அஜித் நிவேதா இருவரும் ஒருவரையொருவர் அன்புப் பார்வையால் பார்த்த வண்ணம் இருந்தனர். அஜித், நிவேதா இருவரும் அன்பு பிணைப்பால் கட்டுண்டனர். அஜித்துக்கோ அவள் மீதிருந்த அன்பு காதலாக மாறியது, அவளிடம் தனது காதலை வெளிப்படுத்த துடியாய் துடித்துக் கொண்டிருந்தான். அஜித்தின் தாய் அருந்ததியும் நிவேதாவை அஜித்திற்கு திருமணம் செய்ய வேண்டும் என்று ஆவலோடு இருந்தாள். இதைப்பற்றி நிவேதாவிடம் பேசி

னாள் நிவேதாவோ நான் ஒரு ராசி இல்லா தவள் என்னைப்போய் திருமணம் செய்வதா என்று மறுத்துவிட்டாள். அஜித் ஒரு சில நாட்களின் பின் உடல்,

நலக்குறைவால் படுக்கையில் விழுந்து விட்டான் அஜித்திற்கு எல்லா சேவைகளை யும் நிவேதாவே செய்து வந்தாள். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு நாள் நிவேதா உணவு பரிமாறும் போது நிவேதாவிடம் தனது காதலை வெளிப்படுத்தினான். நானோ ராசி இல்லாதவள் என்னைப் போய் நீங்க என்றாள் நிவேதா அப்படியெல்லாம் சொல் லாதே உனக்கும் ஒரு வாழ்க்கை உண்டு அந்த வாழ்வில் தான் என் ஆயுளும் உண்டு என்று கூறினான். அப்போது தான் அஜித் திற்கு ஒரு சிறுநீரகம் பழுதடைந்திருப்பது நிவேதாவிற்கு தெரிந்தது. இருவரும் தமது காதலை வெளிப்படுத்தினர். இருவரும் ஒரு வரையொருவர் பார்த்த படி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். பெற்றோரிடம் அஜித் தெரிவித்தான். பெற்றோரும் இவர் களது ஆசைகளை நிறைவேற்ற நினைத்த னர். செல்வந்தர்கள் என்பதால் தமது நகை நட்டு, தோட்டம், கார், வங்களா என்று எல்லாவற்றையும் விற்று அஜித்திற்கு சிறு நீரகம் மாற்றினர். நோய் குணமானது அஜித் நிவேதா இருவருக்கும் திருமணமானது இளநெஞ்சங்கள் சேர்ந்தது.

# விளையாட்டுக்களும் அவற்றின் நன்மைகளும்

தொகுப்பு: உதயகுமார் பிரபாஜினி
ஆண்டு - 9 வீ.

"உடலை உறுதி செய்" என்பது பழ மொழி சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத லாம். என்பதும் இந்தக் கருத்தையே உறுதி செய்கிறது. உடல் வலிமை இல்லாமலோ நோய் பீடித்தோ இருந்தால் எங்களால் எதையும் செய்ய இயலாது. படிப்பும் ஏறாது பிறருக்குப் பாரமாகவே வாழ நேரிடும். எனவே உடலை உறுதியாக வைத்திருக்க விளையாட்டுக்கள் மிகவும் உதவும் இதனா லேயே மாலை முழுவதும் விளையாட்டு என்று பாரதியார் எங்களுக்குப் புத்திமதி கூறினார்.

விளையாட்டு உற்சாகம் தரும் பொழுது போக்குமாகும். உடலால் செய்யும் தொழில் போல அது அலுப்பைத் தருவதில்லை. ஆத லால் விளையாட்டின் மூலம் மனங்கள களிப்பை அடைவதையும் காண்கிறோம். விளையாட்டுக்கள் ஒழுங்கையும் கட்டுப்பாட் டையும் வளர்க்கின்றன. தலைவனுக்கு அடங்கி அவன் வழிகாட்டலை ஏற்றல் கூட விளையாடுவோருடன் ஒத்துழைத்தல் வெற்றி யில் சமநிலையைக் கடைப்பிடித்தல் என்ற நல்ல ஒழுங்கு முறைகளுக்கு விளையாட்டுக் கள் வழிவகுக்கின்றன.

வெற்றியில் மகிழ்ச்சி அடைவது மட்டு மன்று. செருக்கு கொள்ளாது மனத்தை அமைதிநிலையில் வைக்கும். பயிற்சியையும் விளையாட்டுக்கள் எமக்கு அளிக்கின்றன. இதிலும் மேலாகத் தோல்வியில் அமையும். துக்கமின்மையும் ஏற்படுவதே விளையாட்டுக் களின் பயன் எனலாம். இதனோடு சிறந்த முறையில் திட்டங்களை வகுத்து விளை யாட்டை நன்முறையில் ஆடுவதும் புத்தியைக் கூர்மைப்படுத்த உதவும். ஆகவே உடல் வலிமை, சுறுசுறுப்பு, ஒழுங்கு பேணல், கட்டுப்பாட்டுக்கு அடங்கல், வெற்றியிலும் தோல்வியிலும் சமமான மனநிலை பெறல் புத்திக் கூர்மையை வளர்த்தல் ஆகிய பல நன்மைகளை விளையாட்டுக்கள் அளிக்கின் றன. இவற்றை உணர்ந்து சிறுவர் சிறுமி களாகிய நாங்கள் விளையாட்டுக்களில் ஆர்வத்துடன் ஈடுபடல் வேண்டும்.

# முத்தமிழ் வளர்ப்போம்

தொகுப்பு: சு. சுபாஜினி
ஆண்டு - 9 வீ

முத்தமிழ் என்றால் மூன்று தமிழ் எனப் பொருள்படும். அதாவது இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் மனிதனுடைய வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. இம்மொழி எப்பொழுது எங்கு எவ்வாறு தோன்றியது என்பதற்கு இன்று வரை சரியான சான்றுகள் கிடைக்கவில்லை. முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்ந்த சங்ககாலம் அக்காலத்திலே மூவேந்தர்களும், முச்சக்கரவர்த்திகளும் தமிழ் வளர்க்க தவம் கிடந்த காலம்.

அன்றுதொட்டு இன்றுவரை தமிழர்களின் திட்டமான இயல், இசை, நாடகமான முத்தமிழை வளர்க்க பெரியோரும் தமிழ் அபிமானிகளும் அரும்பாடுபடுகின்றனர். வேற்று மொழிக்கு இல்லா இச்சிறப்பை தமிழன் பெறுவதால் அது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். யாமறிந்து மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காண்போம். என்று பாட்டுக்கோர் புலவன் பாரதி பாடியது ஓர் நற்சான்று. ஒரு மொழியின் மூலம் கலை, கலாச்சாரம், பண்பாடு தோன்றுவது இயற்கையே. அந்த வகையிலே தமிழுக்கென்று கலை, கலாச்சாரம், பண்பாடு தோன்றுவது விதிவிலக்கல்ல. இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழை மணம் பரப்ப விழாக்கள் எடுக்கப்படுகின்றன. உலகம் எங்கணும் மூலைமுடுக்கெங்கும் வாழும் தமிழன் தமிழ் வளர்க்க பாடுபட வேண்டும் உலக நாடுகள் தமிழனின் பெருமை பேசி நிற்கின்றன. பன்னெடுங்காலத்திற்கு முன்பே தனக்கென ஒரு தனியான பாரம்பரியத்தை தோற்றுவித்தது தமிழ்மொழி.

நாட்டியம், சங்கீதம், நாடகம் ஆகியவற்றினூடே தமிழனின் பாரம்பரியங்கள் புலப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில் முத்தமிழ் வித்தகர் என போற்றப்படுபவர் விபுலானந்த அடிகள் தம் உடல், பொருள் ஆவி மூன்றையும் தமிழுக்காக அர்ப்பணித்தவர் அவர் இவர்கள் வழிதொடர எமது இளம் சமுதாயம் முன்வர வேண்டும். முத்தமிழை வளர்க்க வேண்டும். இவற்றிற்கு விழாக்கள் எடுக்க வேண்டும். தமிழின் பெருமை உலகெங்கும் ஓங்க வேண்டும். எனவே இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற மொழியாகிய தமிழ் மொழியை விரும்பி சுவைத்து முத்தமிழை பரப்பி அதன் புகழை உலகோங்கச் செய்து நிலை நாட்டுவோம்.

வயது ஆக ஆக தலைமுடி நரைத்துப் பற்கள் விழுவதற்குப் பதிலாக நாக்கு விழுந்து விட்டால் எவ்வளவு நிம்மதி.

— **கண்ணதாசன்**

# முன்னேறிச் செல்

தொகுப்பு: க. உத்தமி
ஆண்டு - 5 வீ.

ஓர் ஏழை விறகு வெட்டி இருந்தான். அருகில் இருந்த காட்டுக்கு நாளதோறும் சென்று அவன் விறகு வெட்டுவது வழக்கம். அதனால் கிடைக்கக் கூடிய சொற்பவருவாயில் சிரமத்தோடு அவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் வழக்கப்படி அவன் விறகுகளை வெட்டிக்கொண்டிருந்தான். அப்பொழுது தற்செயலாக அந்த வழியே வந்த பிரம்மச்சாரி ஒருவர் அவனைப் பார்த்தார். விறகு வெட்டியை நோக்கி அவர் ''அப்பா மேலும் நீ முன்னேறிச் செல்'' என்று சொல்லிவிட்டுத் தம் வழியே போய்விட்டார். வேலை முடிந்து விறகுவெட்டி வீடு திரும்பினான்.

பிறகு பிரம்மச்சாரி சொல்லிவிட்டுப் போனதைப்பற்றி சிந்தித்துப் பார்த்தான். அந்த பிரம்மச்சாரி அப்படிச் சொன்னதில் ஏதாவது பொருள் இருக்க வேண்டும். நான் காட்டுககு உள்ளே சென்று பார்க்கிறேன். என்று தனக்குத் தானே முடிவு செய்தான். மீண்டும் காட்டிற்குச் சென்றபோது அவன் வழக்கமாக தான் விறகு வெட்டும் இடத்தையும் கடந்து உள்ளே போனான். அப்பொழுது உட்பகுதிகளில் சந்தன மரங்கள் இருப்பது தென்பட்டது மகிழ்ச்சியோடு அவற்றை வெட்டி வண்டி வண்டியாக ஊருக்குள் கொண்டு வந்தான். சந்தையில் அவற்றை விற்றதனால் அவனுக்கு ஏராளமான பணம் கிடைத்தது.

இவ்விதமாக சிலகாலம் கடந்தது. மீண்டும் விறகுவெட்டிக்கு பிரம்மச்சாரியின் நினைவு வந்தது. அவர் இன்னும் கொஞ்ச தூரம் போனால் சந்தன மரங்கள் கிடைக்கும் என்று சொல்லவில்லையே. மேலும் நீ முன்னேறிச் செல் என்றுதானே எனக்கு சொன்னார். என்று நினைத்துப் பார்த்தான். மறுநாள் விறகு வெட்டி சந்தன மரங்கள் கிடைத்த இடத்தையும் தாண்டி காட்டுக்குள் போனான். அப்பொழுது அங்கே தாமிரச் சுரங்கம் இருப்பதைக் கண்டான். தன்னால் இயன்ற அளவுக்கு தாமிரத்தை எடுத்து ஊரிலே விற்றான் அதனால் வருவாய் மிகுந்தது பெரும் பணக்காரர்களில் ஒருவன் ஆனான்.

ஆனால் அவன் அத்துடன் நின்றுவிடவில்லை. பிரம்மச்சாரி சொல்லிவிட்டுப் போன வார்த்தை அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. மீண்டும் அந்த மகான் சொன்னதை சிந்தித்தான். பிறகு தாமிரம் கிடைத்த இடத்தையும் தாண்டிமேலும் சிறிது தூரம் காட்டிற்கு உள்ளே சென்றான். அவனது நம்பிக்கையும் முயற்சியும் வீண்போகவில்லை. அன்றையதினம் அவன் ஒரு நதிக்கரையிலே ஒரு வெள்ளிச் சுரங்கமே இருப்பதைக் கண்டான். இப்படிப்பட்ட வாய்ப்பை அந்த ஏழை விறகுவெட்டி கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. சுரங்கத்திலிருந்து வெள்ளியை எடுத்து வந்து விற்று பணம் ஆக்குவதிலேயே கருத்துச் செலுத்தினான் கொள்ளை கொள்ளையாகப் பணம் கிடைத்தது. ஒரு பெரிய புள்ளியாக கொழுத்த பணக்காரனாகி விட்டான்.

இப்படிக் கொஞ்ச காலம் கடந்தது நாளுக்கு நாள் அவன் மேலும் மேலும் காட்டின் உட்பகுதிகளில் சென்று கொண்டேயிருந்தான். அப்படி அவன் ஆழ்ந்து செல்லச் செல்ல தங்கச்சுரங்கமும். வைரச்சுரங்கமும் இருந்தததைப் பார்த்தான். தங்கத்தையும் வைரக்கற்களையும் குவியல்குவியல்களாகக் கொண்டு வந்தான். அவற்றினால் அவனுக்கு அளவில்லாத ஐசுவரியம் கிடைத்தது. குபேரனைப்போல பணக்காரன் ஆனான்.

# போதைப் பொருட்களும் அவற்றின் விளைவுகளும்

சி. அனட்
( விஞ்ஞான ஆசிரியர் )

மனித நாகரீகம் தோன்றிய காலத்தில் இருந்தே போதைப் பொருட்கள் மனிதனால் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. ஆதி காலத்தில் வாழ்ந்த மனிதன் உணவாக இனிப்புச் சாறு களைப் பயன்படுத்தினான். இவை காற்றுப் பட வைக்கப்பட்ட போது காற்றிலுள்ள நுண்ணங்கிகளான மதுவங்களினால் நொதித் துருவாக்கப்படும் பொருள் போதையை ஏற்படுத்தக் கூடியது என்பதைப் புரிந்து கொண்டான். உழைத்து களைத்து வந்த வேளையில் இவற்றை அருந்தி களைப்பைப் போக்கப் பழகிக் கொண்டான்.

நாகரீக வளர்ச்சியோடு அறிவு வளர்ச்சி யும் விரைவாக இடம்பெற மேலும் பலவகை யான போதைப் பொருட்கள் கண்டு பிடிக்கப் பட்டு மனித குலத்தினரிடையே பாவனைக்கு கொண்டு வரப்பட்டது. இவை எல்லா மனிதர் களிடத்தும் முக்கியமாக எதிர்காலத்தில் ஒரு நாட்டை நல்வழிப்படுத்த வேண்டிய இளைய சமுதாயத்தினரை விரைவாக பற்றிக் கொண் டது. பாடசாலை மாணவர்களிலிருந்து பல்கலைக்கழக மாணவர் வரை போதைப் பொருட்கள் இல்லையேல் எம்மால் வாழ முடியாது எனும் நிலைக்கு மாற்றியுள்ளது. இவற்றின் பாவனை ஒருவரின் உடல் உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு குடும்ப வாழ்வினையும் சீரழித்து சமூக விரோத செயல்களிலும் ஈடுபடச் செய்கிறது. அத்துடன் எயிட்ஸ் போன்ற கொடிய நோய் களை பரவச் செய்வதோடு இளைய சமுதா யம் சீரழிந்து போகவும் வழிவகுக்கின்றது.

இவ்வாறான போதைப் பொருட்களை சட்ட விரோதமற்றவை (நிக்கற்றின், மது சாரம்) சட்டவிரோதமானவை (கஞ்சா, கெரோயின், அபின்) என வகைப்படுத்தலாம். இப்போதைப் பொருட்களின் தன்மையும் அவை பாவிப்பதால் ஏற்படும் விளைவுகளும் வருமாறு.

இன்று மதுசாரம் கள், பியர், வைன், சாராயம், விஸ்கி, ஜின், வொட்கா, றம், பிறண்டி எனபலவகைகளில் காணப்படுகிறது. எல்லா மதுபான வகைகளிலும் முக்கிய இரசாயனப் பொருள் எதைல் அற்ககோல் ஆகும். மதுவங்களின் தொழிற்பாட்டினால் வெல்லங்கள் (கரும்புச்சாறு, திராட்சை, தானியவகை, பனஞ்சாறு, தென்னஞ்சாறு,) நொதிக்கும் போது எதைல் அற்ககோல் உருவாகின்றது. அத்துடன் மதுபானத்திற்கு நிறத்தையும் மணத்தையும் கொடுப்பதற்கு கொன்ஜெனர்ஸ் எனும் வேறு பதார்த்தங்க ளும் சேர்க்கப்படுகிறது.

மது உடலினுள் உள்ளெடுக்கப்பட்டதும் எவ்வித சமிபாட்டுச் செய்முறையுமில்லாது வாய்குழி, இரப்பை, சிறுகுடல் மூலம் மிக விரைவாக உறிஞ்சப்பட்டு குருதி சுற்றோட் டத்தின் மூலம் உடல் முழுவதையும் சென்ற டைகிறது. இதில் 2-5% மான மது எவ்வித மாற்றமின்றி சிறுநீரகத்தினாலும் சுவாசப் பையினாலும் உடலிலிருந்து வெளியகற்றப் பட பெரும்பாலான மது அசற்றல் டிகைட்டு எனும் நஞ்சுப் பதார்த்தமாக மாற்றப்பட்டு உடன் அசற்றேற் எனும் நஞ்சுத்தன்மையற் றதாகிறது. குருதியில் காணப்படும் அற்க கோல் மூளையில் தாக்கத்தை ஏற்படுத்துவ தால் பார்வை, மணம், சுவை, கேட்டல் முத லான உணர்வுகள் குன்றுவதோடு சுவாசத் தசையிழையங்களின் தொழிற்பாடு குறை வடையும். குருதியில் அற்ககோளின் செறிவு அதிகரிக்கும் போது மூளையிலுள்ள சுவாசமை யங்கள் பாதிக்கப்பட்டு மரணம் ஏற்படலாம்.

அடுத்து பெரியோர் முதல் சிறியோர் வரை பிடித்துள்ள போதைப் பொருள் நிக்கட்டின் ஆகும். இது சுருட்டு, சிகரட்' சுங்கான் போன்ற வகைகளில் உண்டு. புகை யிலையை எரிக்கும் போது நிக்கட்டின், காபனோரொட்சைட், ஐதரசன் சயனைட் என்பன உருவாகிறது. புகை உள்ளெடுக்கப் படும் போது 90% நிக்கட்டின் உடலினுள் சென்று சுவாசப்பாதை சிறுநீரகங்களில் படிவுறுவதால் புற்றுநோய் உண்டாகிறது.

புகையின் நச்சுப் பதார்த்தம் குருதியில் சேர்வதால் இதயத்துடிப்பு வீதம் அதிகரிக்கும். குருதிக்குழாய்களில் கொலஸ்ரோல் படிவதால் குருதியோட்டம் தடைப்பட்டு இதயத்தாக்கம் ஏற்படுகிறது. அத்துடன் சுவாசப்பாதையின் நுண்ணிய நாண்கள் பாதிக்கப்படுவதால் சுவாச நோய்களும் ஏற்படுகின்றது.

அண்மைக் காலங்களில் சமூகத்தில் மிக விரைவாகவும் மிக பரந்தளவிலும் பரவி மனித சமூகத்தை பலவாறும் ஆட்டிப்படைக்கும் போதை வஸ்துக்களாக அபின், கஞ்சா, கெரோயின் காணப்படுகின்றது.

கஞ்சா கனபிசுசரைவா எனும் தாவரத்தில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இத்தாவரத்தில் எல்லாப் பகுதியும் போதை ஊட்டக்கூடியவை. இதற்கு மரிஜுவானா, களமிஸ், பொட், கிறாஸ், றிப்பா, ஹார்பி என வேறு பெயர்களுமுண்டு. புகைப்பதற்கான கஞ்சா இத்தாளத்தண்டுகள் அரும்புகள் முதலியவற்றிலிருந்தும் ஹஸ்தைலம் ஹஸிஸ் தூமபானம் தாவரச் சாற்றில் இருந்தும் தயாரிக்கப்படுகிறது. இதில் போதை ஏற்படுத்தும் முக்கிய இரசாயனப் பொருளாக டெல்டா 9 மெற்றா ஹைடொக்ரன் பீனோல் (                ) ஆகும்.

கஞ்சா பானங்களை பயன்படுத்தும் போது அதிலுள்ள                ன் 10-30% வரை 30 நாட்களுக்கு உடலில் காணப்படும். இவை உடலின் கொழுப்பு கொண்ட இழையங்களில் சேர்க்கப்படுவதால் உடற்கலங்கள் சிதைவுக்குள்ளாவதுடன் உடல் வெப்பநிலை குறைதல், இதயத் துடிப்பு வீதம் அதிகரித்தல், சடுதியாக உணவில் விருப்பு, இனப்பெருக்கத் தொகுதி ஓமோன் தொழிற்பாடு; சிந்தித்தல் கணித்தல் திறன் குறைவடைதல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றது.

இளந் தலைமுறையினருள் பலராலும் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகிறது. அபின், கஞ்சாவிலும் தாக்கம்கூடிய போதைப் பொருளான ஹெரோயின் ஆகும். இது அபினில் காணப்படுகின்ற போதையூட்டும் (                ) இருந்து தயாரிக்கப்படுகின்றது. வெள்ளை அல்லது கபில அல்லது சாம்பல் நிறத்தூளாகும். இது உடல் ரீதியாக கூடிய ளவில் போதை காட்டும் தன்மை வாய்ந்ததால் இதன் பழக்கத்திற்குள்ளானவர்கள் பின் பழக்கத்தைக் கைவிட நேரிடும்போது உடலில் தவிர்க்க முடியாத வேதனைக்கு ஆளாவார்கள்.

ஹெரோயின் உடலில் மூளைக் கலங்களின் தொழிற்பாடுகளை மந்தமடையச் செய்கின்றது. இதனால் மனக்குழப்பங்கள் தற்காலிகமாக மறக்கப்படுகின்றது உடலில் நடுக்கமும் முகம் சிவந்து கண்களின் கருவிழி சிறுத்துக் காணப்படுவதோடு உடல் அவயங்களை இயக்கவும் தெளிவாக கதைக்கவும் முடியாத நிலை காணப்படும். உடல் ஹெரோயின் பழக்கத்துக்குள்ளாக உள்ளெடுக்கும் அளவு அதிகரிக்கும். இதனை உட்கொள்ளாது விடின் தசைகளின் வலிப்பு நிலை, வியர்த்தல், நித்திரையின்மை, வயிற்றோட்டம் போன்ற பாரிய உடற்பாதிப்புகள் ஏற்படும். உடலில் இதன் செறிவு அதிகரிக்கும்போது மரணம் ஏற்படும். ஊசி மூலம் உடலினுள் செலுத்துவதால் வைரஸ் நோய்கள். தொய்வு, ஈரல் அழற்சி, எயிட்ஸ் போன்ற நோய்களும் பரவுகின்றன.

இவ்வாறு தீயவிளைவுகளை ஏற்படுத்தும் இப்போதைப் பொருட்களின் பாவனைக்கு இளைய தலைமுறையினர் அடிமையாவதற்கு காரணம் குடும்ப அமைப்பில் ஏற்படும் மாற்றம். முதியோரின் நம்பிக்கையும் வழி நடத்தலும் இன்மை. குடும்ப சூழலை விட்டு வேலைவாய்ப்பு, கல்விக்காகச் செல்லல், சிநேகங்களின் பழக்கங்களைப் பின்பற்றல், எல்லாவற்றையும் பரீட்சிக்கும் தன்மை என்பனவாகும். இப்போதைப் பொருட்களுக்கு இளைய தலைமுறையினர் அடிமையாகாமல் இருக்க பெற்றோர்கள் ஒவ்வொருவரும் பிள்ளைகளை காக்கவேண்டும். தம்மிடையே உள்ள இப்பழக்க வழக்கங்களை நிறுத்த வேண்டும். பிள்ளைகளுக்குத் தகுந்த ஆதரவும் கவனிப்பும் அன்பும் செலுத்துவதோடு அவர்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்த வழிகாட்ட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பெற்றோரும் சிந்தித்து செயற்படும்போது போதைப் பொருட்களுக்கு அடிமையாகாமல் பிள்ளைகளைப் பாதுகாக்க முடியும்.

# தனித்தன்மையை வளர்த்துக் கொண்டால், வெற்றி நிச்சயம்

ஆக்கம்: இ. நாகேந்திரன்
ஆண்டு - 13 வர்த்தகம்

நாம் ஒவ்வொருவரும் அவரவருக்கு என்று தனிப்பட்ட தன்மைகளுடன் உருவாக்கப்பட்டிருக்கிறோம். உலகம் தோன்றியதிலிருந்து இன்றுவரை ஒருவரைப் போன்றே ஒருவர் படைக்கவில்லை. ஒருவரைப் போன்று மற்றவர் தோன்ற முடியாது. என்பதை உணராமல் பிறர் போன்றிருக்க முயற்சிப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை.

நாம் மகிழ்ச்சியுடன் வெற்றி பெற வேண்டுமாயின் பிறரைப் போல் நடிக்கவும் காப்பி அடிக்கவும் கூடாது. வெற்றியின் உறுதிக்கு இவை இரண்டும் கெடுதல் விளைவிப்பவை பலரின் துன்பங்களுக்குக் காரணமே பிறர் போன்று நடிக்க முயன்று தோல்வியுறுவது தான். இது ஒரு நோய் இன்று உலகில் பெரும்பாலானவர்கள் இந்நோய்க்கு உட்பட்டு துன்புறுகின்றனர். நாம் நாமாக இருக்க வேண்டும் என்ற கொள்கைதான் இந்நோய்க்கு மருந்து. நமக்கென்று ஒரு பாதையை வகுத்துக் கொள்ளாமல் மற்றவர்களின் பாதையில் செல்வதால்தான் தட்டுத் தடுமாறி தடுக்கி விழுகின்றோம். பிறருடைய கால் செருப்பை நாம் அணிந்து கொண்டு ஒழுங்காக நடக்க முடியுமா? நம்முடைய அனுபவம், சூழ்நிலை பாரம்பரியம் ஆகியவை நம்மை எவ்விதம் ஆக்கியதோ அதுவாகவே நாம் விளங்க வேண்டும். நம்முடைய தனித்தன்மையை அபிவிருத்தி செய்வதில்தான், நம்முடைய வெற்றியே அடங்கியுள்ளது.

என்ஜினியராக இருந்தால் டாக்டராக இல்லையே என்ற ஏக்கமும், டாக்டராக இருந்தால் எக்கவுண்டனாக இல்லையே என்ற வேதனையும் உள்ளத்தில் தோன்றாமல் இருக்க வேண்டும். எல்லோரும் அமைச்சர்களாகவும், தலைவர்களாகவும், அறிஞர்களாகவும் இருக்க முடியாது. உண்மையான பெரிய மனிதர்கள் எவருமே அடுத்தவரை அப்படியே காப்பி அடிப்பதில்லை. தாங்களாகவே இருக்க முயற்சி செய்வார்களே தவிர பிறராக, அவர்கள் எத்துணை பெரிய மனிதராக இருந்தாலும் அவர் போன்று இருக்க விரும்ப மாட்டார்கள். அதனால் தான் அவர்கள் அறிஞர்களாக இருக்கிறார்கள். பிறரின் பண்பாடு கலாச்சாரத்தைக் கூட பெருமைக் கண்ணுடன் பார்க்க வேண்டுமே தவிர நம்முடைய வாழ்க்கையிலும் பாவனை செய்து பிரதி பலிக்கச் செய்து விடக் கூடாது. மீன் தண்ணீரை விட்டு தரைக்கு வந்தால் உயிர்வாழ முடியுமா?

அதனால் உங்களுக்கென்று ஒரு தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள் அதை எந்தக் காரணம் கொண்டும் விட்டு விடாதீர்கள். உங்கள் வாழ்க்கையில் அதுவே வெற்றி உறுதி!

# பெண்ணொன்று பூமியிலே பிறந்து விட்டால் — (சிறுகதை)

திருமதி. ராஜலோகினி. செல்வராஜா.
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி.

"ஊருக்குப் போகவேணும், ஊருக்குப் போக வேணும்" ரமணன் அடம் பிடித்துக் கொண்டு ஒற்றைக்காலில் நிற்கின்றான். "இவனுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. ஒவ்வொருத்தன் என்னடா என்றால் பட்டணத்தில் சொகுசாகவும், சுகமாகவும் வாழ முடியாதா என்று அங்கலாய்க்கின்றான் இவனுக்கு ஒரு ஊர்ப் பைத்தியம்" அண்ணா பொரிந்து தள்ளியபடியே காரின் கதவை ஓங்கி அறைந்து மூடிக்கொண்டு காரை ஸ்டார்ட் பண்ணுகின்றான். அண்ணாவை எதிர்க்க முடியாத ஆதங்கத்தில் தன்னைத்தானே நொந்து கொண்ட ரமணன் ஓடிச் சென்று கட்டிலில் விழுகிறான்.

சொகுசான கட்டிலில், இதமான மெத்தையில் மல்லாந்து படுத்திருந்த ரமணன் தலைக்கு மேலே சுழலும் மின்விசிறியில் தெரியும் தன் உருவத்தையே அர்த்தமின்றி வெறித்துப் பார்க்கின்றான். "மனம்" என்ற ஒன்று மட்டும் வெளியில் தெரிவதாக இருந்தால், அவன் மனதில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் பிரியாவும் அந்த மின்விசிறியில் தெரிந்திருப்பாளோ என்னவோ. "ஊஹூம்" நீயும், நானும் படித்த படிப்பும், போட்ட திட்டங்களும் வீண்போகக் கூடாது பிரியா. மருத்துவக் கல்லூரியில் ஒருயிரும், ஈருடலுமாகத் திரிந்த நாம் ஊருக்குச் சேவை செய்ய வேண்டும் என்று கண்ட கனவை, நமது இலட்சியக் கனவை நிறைவேற்றாமல் நான் விடமாட்டேன்" எண்ணம் தந்த உந்துதலால் ஆவேசம் வந்தவன் போல எழுந்து நின்ற ரமணன் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு மீண்டும் சுழலும் மின்விசிறியை வெறிக்கின்றான்.

ரமணன் கடைசி முறையாகப் பிரியதர்ஷினியைப் பார்த்தே மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது. தொலைபேசியில் இவன் அழைக்கும் போதெல்லாம் பிரியதர்ஷினி "ஷெல் பட்ட நோயாளிகளையோ அல்லது வேறு அவசர அலுவலாகவோ இருப்பதாய் பதில் கிடைக்கும். இவனுக்குக் கோபம் கோபமாக வரும். இரவில் வீட்டிற்குத் தொலைபேசி அழைப்பு வரும். "டொக்டர் பிரியதர்ஷினி ஸ்பீக்கிங், டொக்டர் ரமணன் பிளீஸ்." குரலைக்கேட்டதுமே துள்ளிக் கொண்டு எழுவான்.

அண்மையில் மருத்துவக் கல்லூரியில் நடந்த ஒரு கருத்தரங்கிற்குத் தனது செயலகப் பிரிவின் பிரதிநிதியாகக் கொழும்பு வந்திருந்த பிரியதர்ஷினியை ரமணன் சந்திக்கிறான். படிக்கும் போது இருந்த மென்மை என்ன? தளிர்ப்பு என்ன? ஏனிப்படி இவள் மாறிவிட்டாள்? உள்ளுக்குள் எழுந்த கேள்வியை இவனால் மறைத்து வைக்க முடியவில்லை. "பிரியா உனக்கு என்ன நடந்தது? ஏனிப்படி மாறிவிட்டாய்? பிரியா மௌனமாகச் சிரிக்கின்றாள். செழித்துப் போயிருந்த ரோஜாப்பூ போன்ற இவனது முகத்தைப் பார்த்து மலர்ந்து சிரித்தவள் திடீரென முகம் மாற எங்கோ வெறிக்கின்றாள். சிரிக்கும் போது தானும் சேர்ந்து சிரிப்பதுபோலக் காட்சியளிக்கும் தீட்சண்யமான அவள் கண்களில் ஒரு வெறிப்பு. "ஊரில் சனங்கள் படும் பாடு துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல்களுக்கும் பயந்து அலைபாயும் வாழ்க்கை . "
"எதுவுமே உனக்குப் புரியாது ரமணன். ஒரு வகையில் நீ அதிர்ஷ்டசாலிதான். ஆனா..... நான் ஒரு இலட்சியவாதி என்று வைத்துக் கொள்ளேன்." இப்போது பழைய படி அவள் சிரிக்கும்போது அந்தக் கண்களும் சேர்ந்து கொள்ளுகின்றன.

பிரியதர்ஷினி சிலவேளைகளில் ரமணன் போல நடந்து கொள்ளமாட்டாள். எதையோ மறைப்பது போல பேசிக் கொள்ளுவாள். பல வேளைகளில் இவனுக்குப் பிடித்தமானதும். சிலவேளைகளில் இவனுக்குத் தாங்கமுடியாத

கோபத்தை ஏற்படுத்துவதும் இந்த அரை குறைப் பேச்சுத்தான். மனதுக்குள் 'சுர்' ரென எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு ''பிரியா உன்னுடைய வைத்தியசாலையில் ஏதாவது இடம் இருக்கா? நானும் மாறுதல் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்கிறான்.

ஏதோ பெரிய ஹாஸ்பத்தைக் கேட்டவள் போல பிரியதர்ஷினி சிரிக்கத் தொடங்குகிறாள்.

''நீ பெரிய தனியார் மருத்துவமனையிலே, குளுகுளு அறையிலே ஹவுஸ் ஒபீஸராகப் பணிபுரிகின்றாய். தமிழ் சஞ்சிகைகளோ, பத்திரிகைகளோ உன்னோட வீட்டிலே கிடையாது. ரீ. வீ யிலோ தமிழ்ப் புரோகிராமே கிடையாது. தமிழ்ப் பாட்டோ. செய்தியோ றேடியோவில் இல்லை. ஊருக்கு வந்து ஆறு வருஷமிருக்கும். முன்பாவது பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கு வருவீர்கள். அப்போதே நீ கச்சான் காற்றுக்கு நன்றாக ஏசிக் ''கவிதை'' பாடுவாய். இப்போதும் காற்று அடிக்குது, மழையும் வேறு இல்லையா? நன்றாய் புழுதியை வாரி இறைக்கும்'' குறும்பாகச் சிரித்துச் சிரித்துத் தான் கேட்ட கேள்விக்கு விடை சொல்ல மறுப்பது இவனுக்குச் சினத்தை வரவழைக்கிறது.

''பிரியா விளங்காதது போல நடிக்காமல் விசயத்துக்கு வா, நானும் உன்னைப் போல திறமையான டாக்டர்தான். டாக்டருக்கு படிக்க வேணும் என்று ஆசைப்பட்டது தியாக மனப்பான்மையால்தான். இந்தப் புனிதமான தொழில் மூலம் ஊருக்கு நான் சேவை செய்ய வேணும் புரிஞ்சுதா? இலேசாக முகம் சிவக்க, ஆள் காட்டி விரலை அவளுடைய முகத்துக்கு நேராக நீட்டிக் கொண்டு படபடத்த ரமணனைத் தடவிக் கொடுப்பது போலப் பார்க்கின்றாள் பிரியா.

அந்த இதமான பார்வை இவனுடைய நினைவில் ஏனோ இன்று வந்து, வந்து அவனது மனதை நெகிழ வைப்பது போல ஒரு பிரமை, ''ரமணா உனக்கு ரெலிபோன் வந்திருக்கு'' அண்ணியின் குரலில் பிரியாவின் நினைவு கலைகின்றது. ''ஹலோ என்ன நடந்தது? யார் பேசுறிங்க.''? பெரிய சத்தத்தில் மிகவும் அதிர்ச்சியுடன் ரமணன் கூறியதைக் கேட்டு அண்ணியைத் தொடர்ந்து அண்ணாவும் ஓடிவருகின்றார்.

''ரமணன் டியூட்டிக்குப் போவதில்லையாப்பா? எவ்வளவு வசதியான வைத்திய சாலை. எத்தனை நாட்களுக்கு இப்படியே இருக்கப் போகிறாய்? உனது மேற்படிப்புக்கு லண்டனுக்குப் போக ஆயத்தங்கள் செய்ய வேண்டும். அண்ணா இரைவது இவனுக்கு கேட்கவில்லை. முதன் முறையாக இவனது வீட்டுச்கு விஜயம் செய்திருக்கும் தமிழ் பத்திரிகைகள் பல அவனைச் சுற்றி இறைந்து கிடக்கின்றன. அவற்றைப் பார்த்த அவன் மீண்டும் பிரியதர்ஷினியின் நினைவில்ஆழ்கின்றான்.

''பெண்ணென்று பூமியிலே பிறந்து விட்டால் பெரும்பிழை இருக்குதடி தங்கமே தங்கம்'' மருத்துவக் கல்லூரி தமிழ் விழாவிலே யாரோ அழகாகப் பாடக் கேட்ட பிரியதர்ஷினி சிரித்துக் கொள்கின்றாள். ''பெண்ணென்று பூமியிலே பிறந்து விட்டால் பெரும் வேலை இருக்குதடி தங்கமே தங்கம்'' என்று நான் மாற்றப் பேசுகிறேன் ரமணன். மின் விசிறியின் சுழற்சியில் அவன் மேசைமீது பத்திரமாக வைத்திருந்த ''தினஇதழ்'' பத்திரிகை அவன் முகத்தின் மேல் வந்து விழுந்து அவன் நினைவைக் கலைக்கின்றது. அதில் வெளியாயிருந்த பிரியாவின் புகைப்படத்தையும் செய்தியையும் வாசித்து வாசித்து அவனுடைய கண்களில் உறக்கம் போய் எத்தனையோ நாட்களாகி விட்டது. என்றாலும் மீண்டும் வாசிக்கிறான்,

''ஊர் மக்களுக்காக, குறிப்பாக, ஏழை மக்களுக்காகச் சேவை புரிந்த டாக்டர் பிரியதர்ஷினி. நடராஜா திடீரெனக் காணாமல் போயிருக்கிறார். எத்தனையோ புகழ்பெற்ற தனியார் மருத்துவ மனைகளிலிருந்து இவருக்கு அழைப்புக் கிடைத்த போதும், அவற்றையெல்லாம் நிராகரித்து, ஊர்மக்களுக்காகவே சேவை புரிந்த இவரது ''திடீர்மறைவு'' பொது மக்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நள்ளிரவு 1.00 மணியளவில் வைத்திய சேவைக்கெனக் கூறி இனந்தெரியாதவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட இவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.''

(யாவும் கற்பனையே)

# மாணவ சமூகமே ஆசார்களை புரிந்திட வேண்டும்

ஆக்கம்: நல்லையா சுரேந்திரகுமார்
ஆண்டு 13 கலை

---

நாட்டின் கண்கள் ஆசிரியர் என உணர்ந்திடுவோம்
கற்ற கல்வியோடு தேசத்துக்குத் தேவையானதனை
கற்க வைத்திடும் பணியைப் போற்றிடுவோம்
கடமைக் கென்று பாராது எதிர்கால சமூகத்திற்கு என
நினைத்து சகலதையும் ஆராய்ந்து உணர்த்திடும்
ஆசிரியர்களை என்றென்றும் புகழ்ந்திடுவோம்.

பயன் எதிர்பாராது அயராது உழைத்து
மாணவனை பலதரப்பட்ட தொழிலுக்கு வித்திட்டு
உயர்த்திடும் ஆசிரியர்களை பணிந்திடுவோம்
அன்பும் பண்பும் வைத்து மாணவர்களின் உடல்
நலம் பேணி வளர்த்திடும் ஆசார்களை
சமூகமே பாதுகாத்திட வேண்டும்.

அறிவும் அருளும் உடையவர்களாய் நின்றும்
குற்றத்தினை திருத்திடும் நீதிபதியாய் நின்றும்
தன்னை இகழ்வார் ஆனாலும் கோபம் கொள்ளாது
சமாதானப்படுத்தி நிற்பவரே ஆசிரியர்கள்
நன்மை தீமைகளை உணர வைத்து உலகின் நிலையை
அறியவைத்திடும் தீபச் சுடர்களை வணங்குவோம்.

சோதனை பல கண்டு இன்பம் சிலவென கண்டு
காலத்தின் கோலத்திற்கு அடிபட்டு இடிபட்டு
மாணவமணிகளை வழிநடத்திச் செல்ல போராடும் ஆசிரியர்கள்;
பல வகுப்புக்களை பலன் எதிர்பாராது
போதிக்கும் பணியை கௌரவிக்க வேண்டும்
மாணவ சமூகமே ஆசார் ஆசி வேண்டி அவர் வழி நடந்திட வேண்டும்.

# ஒரு பசுக் கன்றும் பன்றியும்

எழுதியவர்: க. பா. கணேசமூர்த்தி
ஆங்கில இலக்கிய ஆசிரியர்
இந்துக்கல்லூரி.

"மைனா பாடசாலையினின்றும் விலக்கப்பட்டு விட்டான்'' என்ற செய்தி கல்லூரி மாணவ மாணவியரிடையே பரபரப்பாகப் பேசப்பட்டது. மைனா பாடசாலை நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருந்தவன். பாடசாலை மாணவன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று கூட அவனிடம் காணப்படவில்லை. இது வரையில் தொண்ணூறு குற்றங்கள் வரையில் அவன் பாடசாலையில் செய்திருப்பான். நான்காம் ஆண்டில் படிக்கும் போதே மைனாவதி என்ற சிறுமிக்கும் ''காதல்'' கடிதம் எழுதி அதிபரிடம் செம்மையாக அடி வாங்கியவன். அன்று தொடக்கம் செல்வகுமார் என்ற இயற்பெயர் மறைந்து 'மைனா' என்ற பட்டப்பெயரும்அவனுடன்ஒட்டிக்கொண்டது

மைனா விலக்கப்பட்டதையிட்டு மாணவர்களோ ஆசிரியர்களோ கவலைப்படவில்லை. ஆண்டு பதினொன்றில் கல்வி பயிலும் தாசனைத் தவிர தாசனின் அந்தரங்க நண்பன் மட்டுமே. எவ்வளவோ அந்தரங்கமான 'மைனா சமாச்சாரங்களை மைனா சுவை சொட்டச் சொட்ட வர்ணிக்கும் போது மெய் மறந்து கேட்பதில் உள்ள சுகம்... ஆ அந்த சுகம் தாசனுக்கு வேறு எதிலும் கிட்டுவதில்லை. தாசன் ஒன்றும் ஏழைப் பையனல்ல. இருந்தாலும் மைனாவுடன் சேர்ந்து பாடசாலை சிற்றுண்டிச்சாலையில் தின்பண்டங்கள் திருடுவதிலும் மாணவ மாணவியரின் புத்தகப் பையிலிருந்து சில்லறைகள் பொறுக்குவதிலும் ஓர் அலாதி இன்பம் கிட்டும். திருடித் தின்பதில் உள்ள சுகம் உழைத்துத் தின்பதில் இல்லை. என்பது மைனாவின் அனுபவ ரீதியான பொன்மொழி.

மைனா இல்லாத பாடசாலை தாசனுக்கு பிடிக்கவில்லை. பாடசாலையில் கிடைப்பதை விட மைனாவிடம் கிடைப்பது தாசனுக்கு இனித்தது, அறிவு அரைவேக்காடாகவும் அனுபவம் பூச்சியமாகவும் உள்ள பருவத்தில் நல்லதெல்லாம் தீயதாகவும் தீயதெல்லாம் நல்லதாகவும் தீயதையும் இன்று கண்டு ஏற்க வேண்டியதை ஏற்று ஒதுக்க வேண்டியதை ஒதுக்குவான். தாசன் சூழலைத் தனக்கேற்றபடி மாற்றவில்லை. சூழலும் சகவாசமும் அவனை மாற்றி விட்டன.

பாடசாலை விட்டதும் மைனாவுடன் சேர்ந்து ஊர்சுற்றுவதிலும், வம்பளப்பதிலும் தகாத படங்கள் பார்ப்பதிலும் தாசன் தன் நேரத்தைச் செலவிட்டான். அவன் பாடசாலைக்குப் போவதையும் குறைத்துக் கொண்டான். க. பொ. த. (சா/த) பரீட்சையில் நான்கு பாடங்களுக்குத் தோற்றினான். ஒரு பாடத்தில் கூட அவனால் ஒரு சாதாரண சித்தியைப் பெற முடியவில்லை. சித்தியடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் விடை எழுதுபவன்தானே சித்தியடைவான். தாசனுக்கு அந்த நோக்கமெல்லாம் கிடையாது.

மைனாவும் தாசனும் ஊரில் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். இளநீர்க் குலைகள், வாழைக்குலைகள், வெயிலில் உலரப் போடும் உடுப்புக்கள், கோழிகள், ஆட்டுக்குட்டிகள் என்பன மர்மமான முறையில் ஊரில் திருட்டுகளில் ஈடுபடுவது மைனாவுக்கும் தாசனுக்கும் அலுத்துப்போய் விட்டது. பெரிய காரியங்கள் சாதிக்கத் திட்டமிட்டனர்.

ரங்கநாதன் செட்டியார் வெள்ளிக்கிழமைகளில் குடும்பத்துடன் கோவிலுக்குச் செல்வார். மைனாவும் தாசனும் ஒரு வெள்ளிக்கிழமை அவர் வீட்டுக்குக் குறி வைத்தனர். செட்டியார் குடும்பம் கோயிலுக்குப்

போன பின் நண்பர்கள் இருவரும் மதிலேறி குதித்து உள்ளே வந்தனர் கூரை ஓட்டைப் பிரித்து உள்ளே செல்வதெனத் திட்டமிட்டனர். தாசனுக்கு இந்த வேலையெல்லாம் பழக்கமில்லை பயந்து நடுங்கினான். மைனா அவனுக்கு தைரியமூட்டினான்.

'தாசன் என் உடல் பாரத்தை சிலாகை தாங்காது. உனக்கு குச்சிபோல உடல் நீ ஏறு' எனக்குப் பயமாயிருக்குடா கால் நடுங்குது. 'டேய் தாசன் விசர்கதை கதையாமல் ஏறடா நான் இருக்கிறன். நீ ஏன் பயந்து சாகிறாய். உனது உடர்புல ஒருத்தன் கை வைககிறதெண்டா அது இந்த மைனா செத்த பிறகுதான்...... பயப்படாமல் ஏறு, மைனா.

மைனா தன்மேல் வைத்திருக்கிற அன்பைக் கண்டு தாசன் கசிந்து கண்ணீர் மல்கினான். ஓட்டைப் பிரித்துச் சுவாமி அறையினுள் இறங்கினான். அழகிய வெள்ளிச் சிற்பங்கள் இரண்டு உட்படப் பெறுமதியான பொருட்களை யன்னலூடாக மைனாவிடம் கொடுத்தான்.

'அலுமாரிகளை ஆராய்ந்து பார்' என்று மைனா குசுகுசுத்தான். நேரம் போய்க் கொண்டிருந்தது.

தாசன் ஆரோ வாறாங்கடா மைனாவின் குரல் கேட்டுத் தாசன் உறைந்து போய் நின்றான். வீட்டின கதவு படாரெனத் திறந்தது. செட்டியார் ஊழிக்கால உருத்திரன் போல் நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் இரண்டு ஆண்கள் கைகளில் தடிகளுடன்.

பணம் இவ்வுலகின் மிகப் பயங்கரமான சக்தி. செட்டியாரின் பணம் பொலிஸ்காரர்களின் கால்களுக்குப் பலத்தைக் கொடுத்தது. அவர்களின் காற்பலம் தாசனின் விலா எலும்புகளைப் பலவீனமாக்கியது. தாசன் அழுதான். மன்றாடினான். கெஞ்சினான். எதுவும் பலனளிக்கவில்லை. ''திருடன்'' நையப் புடைக்கப்பட்டான்.

செட்டியார் வந்தார். இரண்டு ஆண்கள் வந்தனர். தாசனின் அம்மாவந்தார்பொலிஸ் பொறுப்பதிகாரி வந்தார். மைனா மட்டும் வரவில்லை. வாக்குமூலமென்று ஒரு காகிதத் துண்டை. ஒரு பொலிஸ்காரன் நீட்டினான். கையெழுத்துப் போடச் சொன்னார்கள். போட்டான் அம்மா அழுதாள் எதுவும் பேசவில்லை. பெற்றெடுத்த உள்ளம் என்றும் தெய்வம். அது பேசுகின்ற வார்த்தை மௌனம்' சௌந்தரராஜனின் கணீரென்ற குரல் தாசனின் காதுகளில் ஒலிப்பது போல் ஒரு பிரமை அம்மா போய் விட்டார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவனை அழைத்துப் புத்திமதி சொன்னார். தாசன் தலை குனிந்து நின்றான். அவர் கூறுவது எதுவும் அவனுக்கு விளங்கவில்லை. அவனுக்குச் சுருண்டு படுக்க வேண்டும் போலிருந்தது. விளக்க மறியல் கூட்டினுள் அட்டை போல் சுருண்டு கிடந்தான் தாசன் அவனுடன் இன்னும் ஆறு பேர் அவர்கள் அனைவரும் கவலைகள் எதுவும் இல்லாதவர்கள் போல் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தனர். எங்கோ தூரத்தில் சுவர்க்கடிகாரம் ஒன்று இரண்டு முறை ஒலித்து ஓய்ந்தது. தாசனின உடல் முழுவதும் விண் விண்ணென்று வலித்தது. பொலிஸ்காரன் ஓங்கி அறைந்ததில் பல் குத்தியதால் உதட்டிலே ஒரு காயம். அதை நாவால் இலேசாகத் தடவி விட்டான்.

பொழுது விடிந்தால் நீதி மன்றத்திலே அவன் குற்றவாளிக் கூட்டில் நிற்பான் என்ன தண்டனை கிடைக்குமோ? கடூழியச் சிறை கிடைக்குமா? எத்தனை வருடங்கள்? தாசனுக்கு எதுவும் புரியவில்லை. அவன் உடல் மட்டுமல்ல மனமும் நொந்தது. மெல்ல மெல்ல அவன் தன்னைப் பற்றிச் சிந்திக்கலானான்.

எனக்கு இந்த இழிநிலை ஏன் ஏற்பட்டது. பாடசாலையில் நான் பெற்றது என்ன? பாடசாலையில் ஒழுங்காகப் படித்திருந்தால் நான் இப்போது க. போ. த. உயர் வகுப்பில் இருந்திருப்பேன். எனது பெற்றாருக்கும் கிராமத்திற்கும் நான் என்ன செய்ய முடியும்? எனக்கே நான் சுமையாகிப் போனேன். அடங்கிப் படிக்க வேண்டியபருவத்தில் அடங்காமல் ஆடினேன். இப்போ அடித்து அடக்கப்பட்டு ஆட்டமிழந்து கிடக்கிறேன்.

மைனா இதற்கெல்லாம் அவன்தான் காரணம். அவனைக் குற்றம் சொல்லி என்ன பயன் என் புத்தி எங்கே போய் விட்டது. 'நான் செத்த பின்புதான் உன்னை ஒருவன் அடிக்கத் துணிவான்' என்று அவன் கூறியது வெறும் பசப்பு வார்த்தைதானா? திடீரெனத் தாசனின் மூளையில் எங்கோ ஒரு பொறி தட்டுப்பட்டது. என்ன அது? அது அது... ஒரு பழமொழி பாடசாலையில் எப்போதோ அவன் படித்த ஒரு பழமொழி.

''பன்றியோடு கூடிய கன்றும்
பவ்வி (மலம்) தின்னும்''

# குடித்தொகை பெருக்கமும் அதன் விளைவுகளும்

ஆக்கம்: யே. யூட் ரிறோன்
ஆண்டு - 13 வர்த்தகம்

**பொது**வாக சனத்தொகை எனும் போது குறித்த ஒரு பிரதேசத்தில் அல்லது ஒரு நாட்டில் காணப்படும் மொத்த மக்கள் தொகையின் அளவு குடித்தொகை எனப்படும். குடித்தொகையாவது ஆரம்ப காலத்தில் விரைவாக அதிசரிக்கவில்லை. காரணம் மக்களிடையில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகள், நோய்த்தாக்கங்கள், இயற்கை அழிவுகள் போன்றன. மக்களை இறக்கச் செய்தது.

தற்காலத்தில் சுகாதார மருத்துவ வசதி, சமூக நல வசதிகள், தொழிநுட்ப விருத்தி காரணமாக மக்கள் வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளது. இன்று உலகில் ஒரு மணி நேரத்தில் 13,000 மக்கள் பிறந்து 4000 மக்கள் இறக்கின்றார்கள். ஆகவே ஒரு மணித்தியாலத்திற்கு 9000 மக்கள் அதிகரிக்கின்றார்கள். ஆகவே ஒரு நாளைக்கு 30,000 மக்கள் அதிகரிக்கின்றார்கள். இவ்வாறு விரைந்து பெருகும் குடித்தொகையினை சனத்தொகையின் துரித பெருக்கம் அல்லது சடுதியான வெடிப்பு (Population Explation)என அழைக்கப்படும்.

பொதுவாக சனத்தொகை துரிதமான வளர்ச்சியடைய பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றுள் சில வருமாறு, ஆண்குழந்தையை எதிர்பார்த்திருத்தல், வேலை செய்வோரின்வேலைநரம் குறைவாக இருத்தல்-சில நாடுகள் குடித்தொகை அதிகரிப்பை ஊக்குவித்தல் போன்ற காரணங்களைகூறலாம்.இவ்வாறு சனத்தொகை அதிகரிப்பதனால் பல்வேறு பிரச்சனைகள் தோற்றம் பெறுகிறது. அவையாவன ★ உணவுப் பிரச்சனை, வதிவிடப் பிரச்சனை, தொழிநுட்ப பிரச்சனை, சமூக நல பிரச்னை போன்ற பிரதான பிரச்சனைகள் ஆகும். மற்றும் சூழல் மாசடைதல், கலாச்சார சீர்கேடு போன்ற பிரச்சனைகளும் தோற்றம் பெறுகின்றன.

குறிப்பிட்ட நாட்டில் காணப்படுகின்ற வளமானது அருமைக்குட்பட்டுள்ளது. எனவே குடித்தொகை அதிகரிப்புக்கேற்றவாறு உற்பத்தியும், தொழில்வாய்ப்புக்களும் அதிகரிக்க முடியாது. இன் நிலையினை3ய மேற்போந்த பிரச்சனைகள் நிகழ்கின்றன.

குடித்தொகை வளர்ச்சியால் எழும் பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலம்சனத்தொகை பெருக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்துகின்றன. அதாவது குடித்தொகை பெருக்கம் தொடர்பாக நாட்டுக்கு நாடு சில சட்டங்களை விடுதல், உதாரணமாக குடும்பக்கட்டுப்பாட்டு முறை, நாமிருவர் நமக்கிருவர் போன்ற சட்டங்களை இயற்றுதல், தொழிலாளருக்கான வேலை நேரங்களை அதிகரித்தல். உணவு உற்பத்தியை பெருக்குதல் மற்றும் சமூக நல வசதிகளை ஒழுங்குபடுத்தி அதிகரித்தல். கைத்தொழிலாக்கங்களை மேற்கொள்வதன் மூலம் தொழில் பயிற்சி திட்டங்களையும் சுய தொழில் வேலை வாய்ப்புக்களையும் வழங்குதல். கிராமப்புறங்களில் நகராக்கங்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். உதாரணம் போக்குவரத்து, தொடர்பாடல், தொடர்மாடிகளை அமைத்தல் போன்ற அம்சங்களை செயற்படுத்துவதன் மூலம் சனத்தொகை பெருக்கத்தால் எழும் பிரச்சனைகளை கட்டுப்படுத்தலாம்.

சனத்தொகை பெருக்கத்திற்கான தீர்வினை எடுக்க அரசு முயல்கின்றது. - ஆனால் சனத்தொகை வளர்ச்சி வீதத்தைப் பார்த்து அன் நாடு சிரிக்கின்றது.

# YEAR - 5 Scholarship Examination

## முதன்மை பெறுபேறுகள்

| ஆண்டு | பெயர் | புள்ளி | சித்திபெற்றோர் தொகை |
|---|---|---|---|
| 1992 | K. கார்த்திக் | 170 | 5 |
| 1993 | R. சுரேக்கா | 161 | 5 |
| 1994 | P. கிரிசாந் | 157 | 6 |
| 1995 | T. அமர்நாத் | 146 | 8 |
| 1996 | C. சுஜிவன் | 150 | 12 |

*முற்பிறப்பில் எந்தெந்த உறுப்புக்கள் குற்றம் செய்தனவோ, அந்தந்த உறுப்புக்கள் துன்பத்தையடையும்.*

*திருக்கோயிலிலே தெய்வ வழிபாடு செய்கின்ற கணவனுடன் வந்து வழிபடுகின்ற ஓரழகிய பெண்மணியை கடைக்கண்ணால் உற்று உற்று நோக்கியவனுக்கு மறுபிறப்பில் மாறுகண் உண்டாகும்.*

*பிறர் பேசும் இரகசியத்தை உற்றுக் கேட்பவன் மறுபிறப்பில் செவிடனாகப் பிறப்பான்.*

*நண்டின் பத்துக் கால்களை முறித்துச் சமைத்து தின்றவன் மறுபிறப்பில் பத்து விரல்களும் அழுகித் தொழுநோயினால் துன்புறுவான்.*

*சதா புறங் கூறுபவன் மறு பிறப்பில் ஊமையாகப் பிறப்பான்.*

*ஏழையை ஓங்கியடித்தவன் மறுபிறப்பில் கையொடிந்து முடவனாவான்*

*ஞானிகளைப் பழித்தவன் மறுபிறப்பில் பித்தனாய்ப் பிறப்பான்.*

திருமுருக கிருபானந்தவாரியார்

*உங்கள் எதிரிகளை தாராளமாக மன்னியுங்கள். உண்மையில் உங்கள் மன்னிப்பை விட அவர்கள் உறுத்தக் கூடியது வேறு எதுவும் இல்லை. மிகத் தாராளத்துடன் அன்புடன் மன்னிக்கப்பட்ட எதிரிகள் உங்களுக்கே உண்மையான நண்பர்களாக மாறி விடுகிறார்கள்.*

சுவாமி சின்மயானந்தா

# இந்துமத இறைவனாகிய விநாயகரின் வேறு பெயர்களும் அவற்றின் பொருள்களும்

தொகுப்பு: லோ. அருணா

---

1. விநாயகர்: தனக்குமேல் ஒரு தலைவர் இல்லாத கடவுள் என்பதால் இவர் விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

2. விக்கினேஸ்வரர்: தன்னை அன்புடன் வணங்கி வழிபடுவோரின் விக்கினங்களையெல்லாம் தீர்ப்பதால் இப்பெயர் பெறுவார்.

3. வலம்புரி விநாயகர்: இவரின் வியன்கரளகிய துதிக்கை வலமாக சுழிந்திருப்பதால் இப்பெயர் பெறுவர்.

4. ஐங்கரன்: பொதுவாக இவர் தும்பிக்கையுடன் சேர்த்து ஐந்து கைகளுடன் காணப்படுகின்றார் இதனால் இப்பெயர் பெறுவார்.

5. ஏரம்பர்: தன்மேல் சலித்தவர்களையெல்லாம் இடையூறுகளை நீக்கி பாதுகாப்பதனால் இப்பெயர் பெறுவார்.

6. லம்போதரர்: எல்லா உலகங்களையும் விநயகர் தாங்கிக் கொண்டிருப்பதால் இப்பெயர் பெறுவார்.

7. கஜானனர்: சூப்பகர்ணர் என்பன அன்பர்களின் இடையூறுகளை நீக்கி கருணைக்காற்றை அளித்து மேனோர்க்கும் உண்மை ஞானத்தை உதவுவதால் இப்பெயர் பெறுவார்.

8. ஏகதந்தன்: ஒரு கொம்மை ஒடித்து தியாகம் செய்து எஞ்சிய ஒரு கொம்புடன் காணப்படுவதால் இப்பெயர் பெறுவார்.

9. பிள்ளையார்: அனைவருக்கும் என்றென்றும் செல்லப்பிள்ளையாக இருப்பதனால் இப்பெயர் பெறுவார்.

10. வேழமுகத்தோன்; பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் யானையின் திருமுகத்தைக் கொண்டிருப்பதால் இப்பெயர் பெறுவார்.

11. கணபதி: பூதகணங்களுக்கெல்லாம் அதிபதியாக காணப்படுவதால் இப்பெயர் பெறுவார்.

12. கணேசர்: பூதகணங்களுங்கெல்லாம் ஈசராக விளங்குவதால் இப்பெயர் பெறுவார்

# முதன்மையான பெறுபேறுகள்

## G. C. E. O/L

| ஆண்டு | பெயர் | தரம் D | C | S | F |
|---|---|---|---|---|---|
| 1992 | கு. நிதர்சன் | 4 | 4 | — | |
| 1993 | ப. விமல்ராஜ் | 6 | 2 | — | |
| 1994 | சி. சிவசாந்தன் | 5 | 3 | — | |
| 1995 | சி. பார்த்தீபன் | 4 | 3 | — | |
| | கு. சுதர்சினி | 2 | 6 | — | |
| 1996 | கி. வினோதாஸ் | 8 | — | — | |

## ஏ / எல் கலை

| | | A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 1992 | த. தமிழ்ச்செல்வி | 1 | 2 | 1 | |
| 1993 | க. இந்திரகுமார் | | 2 | 2 | |
| 1994 | சி. சோபா | 2 | 1 | 1 | |
| 1995 | பொ. மங்களரூபன் | 1 | 2 | 1 | |
| | ச. புனிதவாணி | 2 | 1 | 1 | |
| 1996 | க. சுஜிதலால்பீரிஸ் | | 2 | 2 | |
| | இ. ஜெகதீஸ்வரன் | | 2 | 2 | |


## ஏ / எல் வர்த்தகம்

| | | A | B | C |
|---|---|---|---|---|
| 1992 | க. தயாபரன் | 1 | 1 | 2 |
| 1993 | சி. சுதாகரன் | 4 | 1 | |
| | இ. பரமசிவன் | 3 | 1 | |
| | கி. மோகனராஜ் | 2 | 1 | 1 |
| 1994 | ப. தவேந்திரராஜ் | 1 | 3 | |
| | பி. பிரேமகாந்த் | 2 | 1 | 1 |
| 1995 | கே. நவரெட்ணராஜா | 2 | 2 | |
| 1996 | க. சேம்தினேஸ் | 4 | | |
| | புவனேந்திரன் | 2 | 2 | |
| | புஸ்ப்பகாந்தன் | 2 | 2 | |

## ஏ / எல் விஞ்ஞானம்

| | | A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 1994 | இ. நிதிராஜ் | | | | 4 |
| 1995 | இ. நிதிராஜ் | | | 1 | 2 |
| 1996 | ப. ரா. றொகான் | | | | 1 |

# குறுக்கெழுத்துப் போட்டி




## இடமிருந்து வலம்

01. மழை பெய்தால் இது கிடைக்கும்
02. உணவைக் குறைத்து கடவுளை தியானித்தலை இவ்வாறு கூறலாம்
03. மக்களை மகிழ்விப்பவன்
04. பண்டைய அரசர்களின் ஆயுத வகைகளில் ஒன்று (கடைசி எழுத்து விடுபட்டுள்ளது)
05. முற்காலத்தில் இதைக் கொண்டுதான் ஒருவனது குணத்தை கணக்கிடுவர்
06. பஞ்சமா பாதகங்களில் ஒன்று

## மேலிருந்து கீழ்

01. வானவில்லில் தென்படுவது
0இ. மதிப்பிற்குரியவராக கருதப்படுபவர்
03. ஒரு பிராணியின் சிறுநீர்
07. உறவு முறைகளில் ஒன்று
02. வைத்தியசாலையில் அதிகமாக காணலாம்
08. உடல் வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது

திருமதி பா. வாமதேவன்
(ஆசிரியை)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி
சீ. லோகேஸ்வரி (மலர் ஆசிரியை)
மட் / வாழைச்சேனை இந்துக்கல்லூரி